தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 39 சுபகிருது வருடம், ஆடி மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை
(15.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 16 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறக்கூடாது

10 கட்சிகள் தீர்மானம்

(யோ.தர்மராஜ்)

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ளாதிருப்பதற்கு 10 கட்சிகளுக்கு இடையே இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதாக அரசிலிருந்து வெளியேறி...

02 பக்கம்

அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை மட்டுப்படுத்துக!

இலங்கை மத்திய வங்கி ஆலோசனை

(யோ.தர்மராஜ்)

நாட்டின் மொலர் பற்றாக்குறை மேலும் உக்கிரமடையும் என்பதால் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை கடுமையாக மட்டுப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கியினால் நிதியமைச்சுக்கு...

02 பக்கம்

சர்வதேச தமிழ் அமைப்புகள் நபர்கள் மீதான தடைநீக்கம்

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க புலம்பெயர் சமூகத்துக்கு அரசு நேசக்கரம்

(யோ.தர்மராஜ்)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றினதும், தனிநபர்கள் மீதான தடைகளை நீக்குவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அத்தோடு, மேலும் மூன்றுபுதிய அமைப்புகள் மீது தடை விதிப்பதோடு, எல்.ரீ.ரீ.ஈ உள்ளிட்ட 15 அமைப்புகள் மீது தொடர்ந்து தடைவிதிக்கவும் பாதுகாப்பு அமைச்சு...

02 பக்கம்

The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY
No. 2291/02 - MONDAY, AUGUST 01, 2022
PART I : SECTION (1) — GENERAL
THE UNITED NATIONS ACT, NO. 45 OF 1968
Amendment to the List of Designated Persons under Regulation 4(7) of the United Nations Regulations No. 1 of 2012

முத்திரை விலை இன்று அதிகரிப்பு

அதிகரிக்கப்பட்ட தபால் கட்டணங்கள் இன்றுமுதல் நடைமுறைக்கு வரும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 15 ரூபாவாக காணப்பட்ட சாதாரண தபால் கட்டணம் 50 ரூபாவாக திருத்தப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் சலுகைக் கட்டணமும் திருத்தப்பட்டுள்ளது.

20 கிராமுக்கு 12 ரூபாவாக காணப்பட்ட குறித்த கட்டணம் 30 ரூபாவரை திருத்தப்பட்டுள்ளது. அத்துடன், பதிவுத் தபால் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 60 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய தபால் பரிமாற்ற நிலையத்தினால் பொறுப்பேற்கப்படும், கொழும்பு 1 முதல் 15 வரையான பிரதேசங்களுக்கு இடையிலான கடிதங்களுக்கான கட்டணம் 12 ரூபாவிலிருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

5 வயது மகனின் கழுத்தை வெட்டப்போவதாக மிரட்டல்!

வீடியோ வெளியிட்ட கணவன் கைது

தனது 5 வயது மகனின் கழுத்தில் கத்தியை வைத்து, அவரை கொலைசெய்துவிட்டு தானும் தற்கொலை செய்யப்போவதாக மனைவியை அச்சுறுத்திய தந்தையொருவர் குளியாபிட்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு...

02 பக்கம்

புலம்பெயர் தமிழர்களை தடைப்பட்டியலில் வைத்து உதவிகளைப் பெறமுடியாது

பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

"புலம்பெயர் தமிழர்களையும் அவர்களது அமைப்புகளையும் தடைப்பட்டியலில் வைத்துக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முதற்கட்டமாக...

02 பக்கம்

ஈஸ்டர் தாக்குதலில் மறைக்கப்பட்ட உண்மையை வெளிக்கொணருக!

ஜனாதிபதியிடம் பேராயர் வேண்டுகோள்

ஈஸ்டர் தினத் தாக்குதல்கள் தொடர்பில் புதிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ள கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித், ஈஸ்டர் தினத் தாக்குதல் தொடர்பான மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர முயற்சித்தால் மட்டுமே தற்போதைய...

02 பக்கம்

செலவுகளைக் குறைக்க அமைச்சு செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்

சமன் ஏக்கநாயக்க விடுத்தார்

அரசாங்க செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதற்குமேயமான கட்டுப்பாடுகளை விதித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதன்படி செலவீனங்களை கட்டுப்படுத்துவது...

02 பக்கம்

ஆகாஷவாணி... செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி...

- மறைந்தது காந்தக்குரல் -

12 பக்கம்

ஐ.நா. சபை முக்கியஸ்தர்கள் இலங்கை வர ஏற்பாடு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், அந்த அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் ரோரி முங்கோவன் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (UNDCO) ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிராந்திய இயக்குநர் டேவிட் வில்லியம் மெகலாகான் ஆகியோரே இலங்கை வரவுள்ளனர்.

ரோரி முங்கோவன் செப்டெம்பர் மாத...

02 பக்கம்

செஞ்சோலை படுகொலை நினைவு யாழ். பல்கலையில்

02 பக்கம்

அமைப்புகள் மீதான தடைநீக்கத்தை ஆராயவேண்டும் என்கிறார் சரத் எம்.பி.

(யோ.தர்மராஜ்)

பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதாகக் கூறி தடை செய்யப்பட்ட 6 அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டமை சரியானதா என்பதை மீண்டும் ஆராயவேண்டும் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எம்.பி. 'தமிழன்' செய்திகளிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

6 தமிழ் அமைப்புகள் மீதான தடைய நீக்கியமை குறித்து வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

6 அமைப்புகள் மீது தடைவிதித்ததனால் நாட்டில் எவ்வித நிதி முதலீடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. எனவே, தற்போதைய சூழ் நிலையில், நிதி தொடர்பில் எமக்கு உதவிகள் வேண்டும் என்பதாலேயே குறித்த 6 தமிழ் அமைப்புகள் மீதான தடையையும் நீக்கியதாக அரசு பக்கம் நியாயம் தெரிவிப்பதாகவும்...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

ரணில் ஜயாவுக்கு புது வீடு கிடைச்சிட்டுதோ? ரணில் கோ ஹோம் என்டு கத்தாமல் இருக்கிறாங்கள்...

எரிபொருள் பெற ஒரு எண்ணின் கீழ் பல வாகனங்கள் பதிவுசெய்யலாம்

தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் அறிவிப்பு

அதிகளவான வாகனங்களைக் கொண்ட வணிக நிறுவனங்கள் தமது வணிகப் பதிவு எண்களுடன் (BRN) தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்துக்கான பதிவைப் பெறமுடியும் என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் வணிகப்பதிவு எண்களின் கீழ், ஒன்று அல்லது பல கைப்பேசி எண்கள் மூலம் பதிவுசெய்யலாம் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, http://fuelpass.gov.lk என்ற இணையதள முகவரிக்கு பிரவேசித்து, வணிகப் பதிவு எண் (BRN) வகையின் கீழ், முதலாவது வாகனத்தைப் பதிவுசெய்யலாம்.

அதன்பின் பதிவுசெய்யப்பட்ட கைப்பேசி எண்ணின் சுயவிபரத்தில் உள்நுழைந்து, Add என்பதை...

02 பக்கம்

ஹரக் கட்டா டுபாயில் கைது

பாதாள உலகக் குற்றவாளி கும்பலின் தலைவன் 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக்க டுபாயில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

டுபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவந்த பிரதான பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான நதுன் சிந்தக்க விக்ரமரத்ன, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரும் சர்வதேச பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட இரகசிய நடவடிக்கையின் விளைவாக கடந்த 11ஆம் திகதி டுபாய் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் நாட்டை விட்டு டுபாய்க்கு தப்பிச்சென்றபோது பயன்படுத்திய போலி வெளிநாட்டு கடவுச்சீட்டு மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

02 பக்கம்

உஷ்

சீனக் கப்பல் விவகாரம் குறித்து ஆளுங்கட்சி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாம். ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கையில் இருப்பதால் அவர்கள் எந்நேரமும் அங்கு வரலாமே என்று கருத்தொன்றை முன்வைத்தாராம் சுரேன் ராகவன் எம்.பி. அவரின் இந்த கருத்தால் கடும் கோபமடைந்தாராம் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

02 பக்கம்

நிபந்தனைகளை ஏற்றால் பொறுப்புகளை ஏற்போம்

சம்பிக்க, வெல்கம இருவேறு இடங்களில் கருத்து

(யோ.தர்மராஜ்)

நாங்கள் கூறும் நிபந்தனையை முன்னரே நிறைவேற்றுவதாயின் எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் குமார வெல்கம ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவது மற்றும் அதன் அமைச்சுப் பதவிகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

சம்பிக்க ரணவக்க

நாட்டை வங்குரோத்தடையச்செய்த ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் சுதந்திரமாக இருக்கும் போது, அதற்காக குரல் எழுப்பியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதை நிறுத்த வேண்டும். நாங்கள் அனைவரும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்க்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் மறுசீரமைப்புகள் குறித்து கலந்துரையாடி, அதற்கான வேலைத்திட்டங்களை நாட்டுக்கு வெளியிட வேண்டும். இதனை அடிப்படையாகக்கொண்ட வரவு–செலவுத் திட்டத்தை கொண்டுவருதல் வேண்டும்.

அமைச்சுப் பதவிகளை வகிக்காத நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றக்கூடிய நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டும்.

இதேவேளை, நாங்கள் அமைச்சுப் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றிக் காட்டியவர்கள். ஆனால், இங்கு அமைச்சுப் பதவிகளை விட, தேசிய வேலைத்திட்டமே முக்கியம். ஆகவே, நாங்கள் கூறும் நிபந்தனையை முன்னரே நிறைவேற்றுவதாயின் எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

குமார வெல்கம

ரணில் விக்ரமசிங்கவினால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமா என பலரும் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால், அதற்கு முன்னர் நாங்கள் அவருக்கும் சிறிது கால அவகாசத்தை கொடுக்க வேண்டும். இவரை விட வேறு யாரும் இல்லை என்றே நான் நினைக்கின்றேன்.

அமைச்சுப் பதவிகள் குறித்து அதிகம் பேசப்படுகின்றன. பொறுப்பை வழங்கினால் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கின்றேன். தற்போது பெரிய அமைச்சு அமைக்கப்படுவதாக எதிர்க்கட்சி கூறினாலும், நாடாளுமன்றத்தில் அமைக்கப்படவுள்ள குழுக்களின் 19 பதவிகளை எதிர்க்கட்சி கோருகின்றன. அமைச்சர்களுக்கு கிடைக்கும் அதே சிறப்புரிமைகள் குறித்த குழுவிலுள்ள 19 பேருக்கும் கிடைக்கும்.

எனவே, அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வோரும் குழுக்களிலுள்ள 19 பேரும் ஒரே படகிலேயே ஏறிச் செல்லவேண்டியுள்ளது – என்றார்.

ஒரு லீற்றர் எரிபொருளை ரூ. 250இற்கு வழங்க முடியுமா?

– கணக்காய்வு அலுவலகம் விசாரணை

ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு விநியோகிக்க முடியுமென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்த கருத்து தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கோப் குழுவின் பரிந்துரைக்கமைய இந்த விசாரணை நடத்தப்படுவதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன குறிப்பிட்டார்.

அண்மையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை கோப் குழுவிற்கு அழைத்தபோது, அனைத்து வரிகளுடனும் ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு விநியோகிக்க முடியுமென இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கை, மேலதிக விசாரணைகளின் நிமித்தம் எரிசக்தி அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச...

தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானியை வெளியிட்டு பாதுகாப்பு அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இந்தத் தடை விதிக்கப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஐக்கிய நாடுகளின் கட்டளைகளின் 4(7) கட்டளையின்படி இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 6 சர்வதேச தமிழ் அமைப்புகள் மற்றும் 316 தனிநபர்கள் மீது இலங்கை அரசு விதித்திருந்த தடை நீக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கொள்கை தீர்மானத்தின் 1373 கீழ் 18 அமைப்புகள் மற்றும் 577 தனிநபர்கள் மீது தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கொள்கை தீர்மானத்தின் 1373கீழ் தற்போது 6 அமைப்புகள் மற்றும் 316 தனிநபர்கள் (இதில் ஒரே பெயரைக்கொண்ட 7பேரும் உள்ளடங்குகின்றனர்) மீதான தடையை நீக்குவற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உலகத் தமிழ்ப் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை, அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், தமிழர் ஈழ மக்கள் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஆகியவற்றின் மீதான தடையை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கொள்கை தீர்மானத்தின் 1373 கீழ் தடை செய்வதற்கான புதிய பட்டியலுக்காக 3 அமைப்புகளும் 55 தனிநபர்களின் பெயர்களும் பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தாருல் அதர் அல்லது ஜாமியுல் அதர் பள்ளிவாசல் அல்லது தாருல் அதர் குரான் மதரஸா அல்லது தாருல் அதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் அல்லது ஜமியா மற்றும் பெயர், சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு அல்லது சேவ் த பேர்ள்ஸ் சங்கம் ஆகியன தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்குள் பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கொள்கை தீர்மானத்தின் 1373 கீழ் அமைப்புகள் மற்றும் தனிநபர் மீதான தடை நீக்கத்துக்குப் பின்னர் தடை செய்யும் பட்டியலில் புதிய அமைப்புகள் மற்றும் தனிபர்கள் இணைக்கப்பட்டதற்கு அமைய, 15 அமைப்புகள் மற்றும் 316 தனிநபர்கள் மீது தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்ப்புலிகள் என்றும் எல்.ரீ.ரீ.ஈ. என்றும் அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பு, ஜமாதே மிலாதே ஈப்ராஹிம், விலயாத் அஸ் செயிலானி, கனேடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளைஞர் அமைப்பு, தாருல் அதர் அல்லது ஜாமியுல் அதர் பள்ளிவாசல் அல்லது தாருல் அதர் குரான் மதரஸா அல்லது தாருல் அதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு அல்லது சேவ் த பேர்ள்ஸ் சங்கம் ஆகிய 15 அமைப்புகள் மீது தொடர்ந்தும் தடைவிதிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பல அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்ததோடு, நல்லாட்சி அரசாங்கத்தில் சில அமைப்புகள் மீதான தடையும் நீக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அரசில் இணைந்து...

சுயாதீனமாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

சர்வகட்சியில் இணைவது குறித்த கலந்துரையாடல் தொடர்பாக வினவியபோதே அவர் இதனை 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறி கடந்த இரு மாதங்களுக்கு மேலாக நாங்கள் பல்வேறு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துவந்தோம். இந்த பேச்சுவார்த்தைகளின் இணக்கப்பாடுகளுக்கு அமையவே புதிய கூட்டணி ஒன்றை அமைத்து, ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம் எனவும் கூறினார்.

இந்நிலையில், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதாயின், அதன் வேலைத்திட்டங்களை வெளியிடுமாறும் தேசிய சபையின் வியூகம் என்ன என்பதை தெரிவிக்குமாறும் கோரினோம். எனினும், இதுவரை அவ்வாறான எவ்வித வேலைத்திட்டங்களையும் முன்வைக்கவில்லை. எனவே, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ளாதிருப்பதற்கு 10 கட்சிகளுக்குமிடையே இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் நியமிக்கப்படவுள்ள மேற்பார்வைக் குழு மற்றும் தேசிய சபையின் வியூகம் மற்றும் வேலைத்திட்டங்கள் பார்த்து, அதில் நாட்டுக்கு சேவையாற்றுவதற்கான சாதகமான விடயங்கள் இருந்தால், அதில் இணைந்துகொள்வதற்கு 10 கட்சிகளுக்கு இடையே இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இது குறித்த இறுதி முடிவை நாளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈஸ்டர்...

ஜனாதிபதியை ஏற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையின்போது, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் களுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் வழங்கிய நிதி கையளிக்கப்பட்டது .

இங்கு பேசிய கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் மேலும் தெரிவிக்கையில்,

"ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மையை வெளிக்கொணரும் நோக்கில் தற்போதைய ஜனாதிபதி செயற்பட்டால் மட்டுமே அவரை ஏற்றுக்கொள்வோம். இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் சதி இருக்கலாம் என அறியப்படுகிறது. இது குறித்த உண்மையை வெளிக்கொணர தற்போதைய ஜனாதிபதி உழைக்க வேண்டும்.

மேலும் 2019 ஏப்ரல் 21இற்கு முன்னர் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய சஹ்ரானைக் கைதுசெய்யவிருந்த பொலிஸ் அதிகாரியைத் தடுத்தவர்களுக்குத் தண்டனை வழங்குவது அவசியமாகும். சஹ்ரானை கைதுசெய்ய விடாமல் தடுத்த அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும், ஏனெனில், அவரும் சஹ்ரானைப் போன்ற குற்றத்தை செய்துள்ளார். நாங்கள் யாரையும் பழிவாங்க முயற்சிக்கவில்லை, ஆனால், உண்மையை மட்டுமே அறிய விரும்புகிறோம்" என்று அவர் மேலும் கூறினார்.

ஹரக் கட்டா...

ஹரக் கட்டாவின் முகத்துடன் இறந்த நபரின் தகவலைப் பயன்படுத்தி வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள் ஹரக் கட்டாவின் வழிநடத்தலில் நடந்ததாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அத்தியாவசியமற்ற...

ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

நாட்டிலுள்ள அந்திய செலாவணி கையிருப்பின் மீது ஏற்பட்டுள்ள அழுத்தம் எதிர்காலத்தில் மேலும் உக்கிரடையும் ஆபத்துள்ளதால், இந்த இறக்குமதி கட்டுப்பாடு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு தேவையான டொலர்கள் தக்கவைக்கப்பட வேண்டும் என்பதால், அத்தியாவசியமற்ற அனைத்துப் பொருட்களின் இறக்குமதியை கடுமையாக கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதி செய்ய தேவையில்லாத, அத்தியாவசியமற்ற பொருட்கள் வகைகள் அடங்கிய பட்டியல்கள் மத்திய வங்கியினால் நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கியினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்தப் பட்டியலில் 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்கள் உள்ளடங்கியுள்ளதாகவும் அறிய முடிந்தது.

5 வயது மகனின்...

முன்னர் வெளிநாடு சென்றுள்ள தனது மனைவியை மீண்டும் நாட்டுக்கு திரும்பி வருமாறு வற்புறுத்தும் நோக்கில் அவர் இவ்வாறு செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டுவதை காணொளியாக பதிவுசெய்து, அதனை தனது மனைவிக்கும், மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பிய நிறுவனத்திற்கும் அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தந்தையின் ஆபத்தான செயலால் குழந்தை அதிர்ச்சியடைந்திருப்பது வீடியோவில் தெரிகிறது. சம்பவம் வெளிச்சத்திற்கு வந்ததையடுத்து குளியாப்பிட்டிய பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்து குழந்தையை பொலிஸ் காவலில் எடுத்துச் சென்றனர்.

குழந்தை தந்தையுடன் செல்ல மறுத்துள்ளதுடன், தாய் வரும்வரை தனது உறவினருடன் செல்ல விரும்புவதாகவும் குழந்தை பொலிஸில் தெரிவித்துள்ளார்.

குழந்தையின் வாக்குமூலங்கள் பெறப்பட்டு, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

அமைப்புகள் மீதான...

அவர் தெரிவித்தார்.

நாட்டில் தனி இராச்சியம் ஒன்றை உருவாக்குவதற்கும் பயங்கரவதாக செயற்பாடுகளுக்கும் ஆதரவளிக்கும் காரணத்தினாலேயே குறித்த அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டது. எனினும், தற்போதைய அரசாங்கம் முதலீடுகள் அல்லது பணம் அனுப்பவில்லை என்பதை சுட்டிக்காட்டி அமைப்புகள் மீதான தடையை நீக்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அமைப்புகள் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே உள்ளன. எனவே, இந்த 6 அமைப்புகள் மீதான தடையை நீக்கியது சரியான முடிவா என்பதை ஆராய வேண்டியுள்ளது. இது குறித்து பாதுகாப்பு அமைச்சிடமும் தகவல்களை கோரியுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

செஞ்சோலை...

முல்லைத்தீவு வல்லிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14ஆம் திகதி இலங்கை வான்படையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த பாடசாலை மாணவர்களின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் காலை 11.30 மணியளவில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவுருவப் படத்திற்கு ஈகைச்சுடரேற்றப்பட்டதோடு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஒரு நிமிட அகவணக்கமும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமாரால் படுகொலை தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது.

இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பிரதிநிதிகள், மாணவர்கள், பலகலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்...

சில அமைப்புகள் மீதான தடைகளை நீக்கியுள்ளோம்." - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவிகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் இதனை அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், புலம்பெயர் அமைப்புகள் மீதும் தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது. இதைக் கருத்திற்கொண்டே முதற்கட்டமாக சில புலம்பெயர் அமைப்புகள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தொடர்ந்து தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் அமைப்புகள் குறித்தும், தனிநபர்கள் தொடர்பிலும் அரசு அவதானம் செலுத்தும்" - என்றார்.

செலவுகளைக் குறைக்க...

தொடர்பான திறைசேரியின் சுற்றறிக்கையை கண்டிப்பாக பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் காரணமாக பொதுச் செலவினங்களை முடியுமான வரை குறைக்குமாறு அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள், மின்சாரம் மற்றும் தொடர்பாடல் வசதிகள் உள்ளிட்ட சேவைகளை பயன்படுத்துவதில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டடங்களை வாடகைக்கு எடுப்பது அல்லது புதிய குத்தகை அல்லது குத்தகைக்கு செல்வதை மறு அறிவிப்பு வரும்வரை நிறுத்திவைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாகனங்களுக்கான தற்போதைய ஒப்பந்தங்களை நீடிப்பதற்கு முன்னர் திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடிந்தவரை காகிதப் பயன்பாட்டைக் குறைத்து, அதற்குப் பதிலாக தொழில்நுட்ப தொடர்பு தளங்களுக்கு மாறுமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உஷ்...

அந்த துறைமுகம் சீனாவின் கைகளில் இல்லை. அது இலங்கை கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. வீணாக தெரியாத விடயங்களை பேசப்போகாதீர்... என்று சுரேன் ராகவனுக்கு டோஸ் கொடுத்தாராம் மஹிந்த.

இதன்பின்னர் ஆளுங்கட்சி எம்.பிக்கள் பலரும் சுரேன் ராகவனை கடுமையாக விமர்சித்ததாக தகவல்.

ஐ.நா. சபை...

தொடக்கத்தில் இலங்கை வரவுள்ளார். David William McLachlan நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை வரவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோரை ஐ.நா. அதிகாரிகள் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் பெற...

அழுத்துவதன் மூலம் தமது வணிகத்துக்குரிய மேலும் பல வாகனங்களை சேர்க்க முடியுமென இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் எரிபொருளைப் பெறுவதற்கு, முறையற்ற விதத்தில் அதனை பயன்படுத்த வேண்டாம் என்றும் வலுசக்தி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

பெயர் மாற்றம்

கந்தசேன, நமுனுகுல, பதுளையைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 997494741V கொண்ட இராமநாதன் ராதிகா ஆகிய நான் 04.08.2022 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை இராமநாதன் ஆயிஷா என மாற்றிக்கொண்டுள்ளேன். தற்போது இல. D/03, ஹுசைனியா நகர், பாலமுனை - 04ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இராமநாதன் ஆயிஷா

0 1 11

திகதி 12.08.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4845 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,836,030.00 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 2 5 5 4 7 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,102,347.60

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3087 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,940,380.00 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 01 27 47 79 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,804,320.80

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 875 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,264,560.00 — வெற்றி இலக்கினம் L — வெற்றி இலக்கங்கள் 17 53 54 68 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,025,298.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் : 154 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,726,440.00 — இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 36 45 46 55 — விசேட இலக்கினம் ரிஷபம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,711,771.00

Mega POWER மெகா பவர் கோடி 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1193 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,061,260.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 265,418,158.00 — X 12 51 55 56 60 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

திகதி 13.08.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4846 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,487,880.00 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 6 4 8 6 6 3 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,437,608.60

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3088 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,005,100.00 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 07 55 57 74 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,020,501.60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 876 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,888,580.00 — வெற்றி இலக்கினம் E — வெற்றி இலக்கங்கள் 08 12 49 52 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,214,026.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் : 155 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,463,880.00 — இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 19 50 60 62 — விசேட இலக்கினம் விருச்சிகம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,733,581.60

Mega POWER மெகா பவர் கோடி 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1194 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,003,300.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,418,478.00 — W 18 37 38 63 68 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

யுவான் வாங்- 5கப்பலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி

யுவான் வாங்-5 (Yuan Wang 5) சீனக் கப்பலை, ஒகஸ்ட் 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பல் ஒகஸ்ட் 11ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சு கொழும்பில் உள்ள சீனத் தூதுகத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதுதொடர்பில் வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியுள்ளதாவது,

யுவான் வாங் - 5 என்ற சீனக் கப்பல் தொடர்பிலான கருத்துகளைக் குறிப்பிடுவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு விரும்புகின்றது.

ஒகஸ்ட் 11-17 வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருளை நிரப்பிக்கொள்ளும் நோக்கத்திற்காக சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பலான யுவான் வாங் - 5 திட்டமிடப்பட்டுள்ளதாக ஜூன் 28ஆம் திகதி இராஜதந்திரக் குறிப்பின் மூலம் கொழும்பில் உள்ள சீன மக்கள் குடியரசின் தூதரகம் அமைச்சிற்குக் தெரிவித்தது. குறித்த துறைமுக விஜயத்தின்போது பணியாளர்களின் சுழற்சி எதுவும் நடைபெறாதநிலையில், சீன மக்கள் குடியரசின் தூதரகத்தின் கோரிக்கைக்குத் தேவையான உதவி மற்றும் சாத்தியமான பரிசீலனையை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இராஜதந்திர அனுமதி போன்ற கோரிக்கைகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு அமைவாக, பாதுகாப்பு அமைச்சு, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் ஒப்புதலுக்காக அமைச்சு மேற்படி கோரிக்கையை அறிவித்தது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் நிரப்புதல் நோக்கங்களுக்காக கப்பல் வருகை தருவதற்கான பாதுகாப்பு அனுமதி ஜூலை 07ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சிடமிருந்தும், குறுக்கீடு மற்றும் பாதுகாப்பற்ற அடிப்படைக்கு உட்பட்ட அதிர்வெண்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான தடையில்லாக் கடிதம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்தும் பெறப்பட்டதைத் தொடர்ந்து, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பும் நோக்கத்திற்காக விஜயம் செய்வதற்கான இராஜதந்திர அனுமதி ஜூலை 12ஆம் திகதி அமைச்சினால் சீன மக்கள் குடியரசின் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது. இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் தானியங்கி அடையாள அமைப்பு இயங்கி முறைமையைப் பேணுதல் மற்றும் இலங்கை கடற்பரப்பில் எந்த விஞ்ஞான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படலாகாது போன்ற பாதுகாப்பு அமைச்சினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிபந்தனைகளும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அமைச்சிடம் எழுப்பப்பட்ட சில விடயங்களின் அடிப்படையில், இந்த விடயம் தொடர்பான மேலதிக ஆலோசனைகள் மேற்கொள்ளும்வரை, ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான கப்பலின் விஜயத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கம் ஒகஸ்ட் 05ஆம் திகதியிட்ட இராஜதந்திரக் குறிப்பின் மூலம் சீன மக்கள் குடியரசின் தூதரகத்தைக் கோரியது.

இந்த விடயத்தை நட்பு ரீதியாக, பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஆக்கபூர்வமான உரையாடலின் மூலமாக, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் நலன்களையும் கருத்தில் கொண்டு, அரசுகளின் இறையாண்மை சமத்துவக் கொள்கைகளுக்கு ஏற்ப தீர்க்கும்நோக்கில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் இராஜதந்திர வழிகள் மூலமான உயர்மட்ட ஆலோசனைகளில் அரசாங்கம் விரிவாக ஈடுபட்டுள்ளது. எழுப்பப்பட்ட கவலைகளின் அடிப்படையில், அமைச்சு இந்த விடயத்தில் ஆலோசனைகளுக்கு உதவக்கூடிய மேலதிக தகவல்களையும் ஆவணங்களையும் கோரியது.

யுவான் வாங் - 5 கப்பல் ஒகஸ்ட் 16ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 16 முதல் 22 ஒகஸ்ட் வரையான காலப்பகுதியினான புதிய திகதிகளில் எரிபொருள் நிரப்பும் நோக்கங்களுக்காக அனுமதி கோரி விண்ணப்பித்ததாகவும், இராஜதந்திரக் குறிப்பின் மூலம் சீன மக்கள் குடியரசின் தூதரகம் ஒகஸ்ட் 12ஆம் திகதி அமைச்சிற்குத் தெரிவித்தது. அனைத்து ஆவணங்களையும் கருத்தில் கொண்டு, ஒகஸ்ட் 16 - 22 வரை கப்பல் வருகை தருவதற்கான அனுமதி சீன மக்கள் குடியரசின் தூதரகத்திற்கு ஒகஸ்ட் 13ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது.

அனைத்து நாடுகளுடனுமான இலங்கையின் ஒத்துழைப்பு மற்றும் நட்புறவுக் கொள்கையை மீண்டும் வலியுறுத்துவதற்கு அமைச்சு விரும்புகின்றது. சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

இலங்கையின் சர்வதேச கடமைகளுக்கு அமைவாக, அனைத்து நாடுகளினதும் நியாயமான நலன்களைப் பாதுகாப்பதே அதன் நோக்கமாகும். குறிப்பாக, தற்போதைய காலகட்டத்தில் கடுமையான பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள மற்றும் இலங்கை மக்களின் நலன்களை உறுதிப்படுத்தும் பல உள்நாட்டு செயன்முறைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அனைத்து நாடுகளினதும் ஆதரவு, ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வை அமைச்சு பாராட்டுகின்றது.

சுற்றுப்புறப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

இலங்கையின் சர்வதேச கடமைகளுக்கு அமைவாக, அனைத்து நாடுகளினதும் நியாயமான நலன்களைப் பாதுகாப்பதே அதன் நோக்கமாகும். குறிப்பாக, தற்போதைய காலகட்டத்தில் கடுமையான பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள மற்றும் இலங்கை மக்களின் நலன்களை உறுதிப்படுத்தும் பல உள்நாட்டு செயன்முறைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அனைத்து நாடுகளினதும் ஆதரவு, ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வை அமைச்சு பாராட்டுகின்றது.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளுக்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளின் பொதுச்செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் கருத்துகளை கேட்டறிவதற்கும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள அரசியல் கட்சிகளின் யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் எதிர்காலத்தில் குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்குமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அந்தவகையில் தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத சுமார் 50 அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன.

தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழு, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத மின்வேலியில் சிக்கி மூன்று யானைகள் உயிரிழப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி மூன்று யானைகள் உயிரிழந்த சம்பவம் நேற்று (14) இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளர் மிஹிந்தலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மிஹிந்தலை பொலிஸ் பிரிவிலுள்ள புதுக்குளம் வயல் காணியொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை புதுக்குளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 51 வயதுடைய காணி உரிமையாளர் ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அனுமதியின்றி தனது வயல் நிலத்திற்கு மின்கம்பிகளை பொருத்தியுள்ளார் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்கள அநுராதபுரம் அலுவலக அதிகாரிகளும் மிஹிந்தலை பொலிஸாரும் தனித்தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாத சுவாமி ஆலய மஹோற்சவம்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தின் மஹோற்சவம் நேற்று (14) சுபவேளையில் ஆலய பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ எஸ்.பந்தமநாயக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

கொடிச் சீலை, அலங்கரிக்கப்பட்ட யானையின் மேல் வைத்து வெளி வீதி வலம் வந்து அது ஆலய பிரதம குருவிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் கொடிச் சீலை மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேட வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெற்றன.

மேற்படி பூஜையை மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சிவனந்த குருக்கள் நடத்தினார்.

பின்னர் கொடிச்சீலை கொண்டு வரப்பட்டு கொடிச்சீலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டு மந்திர பாராயணம் ஓதப்பட்டு கொடியேற்றம் மங்கள வாத்தியம் முழங்க பக்தர்களின் அரோஹரா சத்தம் முழங்க இடம்பெற்றதுடன், பின்னர் கொடிக் கம்பத்திற்கு பாலபிஷேகம் செய்யப்பட்டது.

மஹோற்சவத்தின் கொடியேற்றத்தில் நாட்டின் நாலா பாகங்களிலும் இருந்தும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இன மத பேதமின்றி கலந்து கொண்டனர்.

உற்சவங்கள் தொடர்ந்து 28 தினங்கள் இடம் பெறவுள்ளதுடன், இதில் முக்கிய உற்சவங்களாக விநாயகர் உற்சவம், சுப்ரமணியர் உற்சவம், மஹா விஷ்ணு உற்சவம், தீர்த்திப்பு உற்சவம், பிஷாடனர் உற்சவம், நடேசர் உற்சவம், வேட்டைத்திருவிழா, தேர்த் திருவிழா மற்றும் தீர்த்த திருவிழா இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

துதி ஆசிகள் கொண்ட முதியங்கனையில், நிதி ஆசிகளை அள்ளித் தரும் நவீன வங்கி முறைமைகளுடன்...

டிஜிட்டல் வங்கி முறைமைகளை கண்டுபிடிப்பதில் சிறப்பிடம் வகிக்கும் இலங்கை வங்கித் துறையின் முன்னோடியான மக்கள் வங்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க பதுளை முதியங்கனையில், இல. 01/B, பஸார் வீதி, பதுளை எனும் முகவரியில் இயங்கி வந்த அதன் கிளையினை, இன்று முதல், **வணிக மற்றும் வங்கித் தொகுதி, தெபல்ஹல வீதி, பதுளை** எனும் முகவரிக்கு நவீன வசதிகள் மிக்க புதிய சூழலுக்கு இடம் மாற்றுவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்புறு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK Pride of the Nation

AA- (lka) மிகச் நேட்டிங், AAA: நேரான் மிகுளன் நேட்டிங் மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. வீரேரோம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒகஸ்ட் 15ஆம் திகதி, திங்கட்கிழமை

தடைகளை நீக்கினால் எல்லாம் சரியாகிவிடுமா?

தமிழ் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர் அமைப்புகள் சிலவற்றின் மீதான தடையை நீக்கியுள்ளது இலங்கை அரசு. உலகத் தமிழர் பேரவை மற்றும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மீதான தடைகளை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. பிரித்தானிய தமிழர் பேரவை, கனடா தமிழக் காங்கிரஸ் ஆகிய அமைப்புகள் மீதான தடையையும் இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை நீக்கப்பட்டுள்ளது. தற்போது புலம்பெயர் அமைப்புகளும், தமிழர்களும் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்திருப்பதால் இலங்கையின் பாதுகாப்புத்துறை இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. தேசிய பாதுகாப்பு, பயங்கரவாதம் என்ற அடிப்படையில் யுத்த காலத்தில் பல புலம்பெயர் அமைப்புகளும், புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களும் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தாலும் உதவி தேவைப்படும் இன்றைய காலகட்டத்தில் பயங்கரவாத பட்டியலில் இருந்த தமிழ்ப் பிரஜைகள், தமிழ் அமைப்புகளை இலங்கை அரசு விடுவித்துள்ளது.

கடந்த காலங்களில் புலம்பெயர் அமைப்புகளால் அழுத்தம் கொடுக்கப்பட்டும் பல வருடங்களாக நீக்கப்படாத தடையை, அரசு தற்போது நீக்கியிருக்கிறது. நாட்டில் தற்போது மிகப்பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, நெருக்கடியிலிருந்து மீள உதவி செய்யும் சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் கூட கைவிரித்த நிலையில் அயல்நாடுகளை நம்பியும், புலம்பெயர் முதலீடுகளை நம்பியும் சில ஏற்பாடுகளை செய்துவருகிறது ரணில் அரசு.

தங்களுக்கு தற்போது பெரும்பாலான உதவிகளை செய்ய இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தயாராக இருப்பதை இலங்கை அரசு உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. இதனடிப்படையில் கடந்த யுத்த காலத்தில் வெளிநாடுகளில் செயல்பட்ட தமிழ் மக்களின் பல அமைப்புகள் மீதான தடையை நீக்கத் துணிந்துள்ளது.

தவறான தகவல்களாலும், புலம்பெயர் தமிழர்கள் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டுகளாலும், இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற ஒரு கோட்டின் கீழ் பல புலம்பெயர் அமைப்புகளை தடை செய்தது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கைக்கு அதிகமான உதவி தேவைப்படுகிறது. முதலீட்டாளர்கள் தேவை. இலங்கையின் பொருளாதாரத்தை, அபிவிருத்தியடையும் நிலைக்கு முக்கியமாக புலம்பெயர் தமிழர்களின் உதவி தேவைப்படுகிறது. ஒரு காலத்தில் யுத்தத்தின் காரணமாக விரட்டப்பட்ட தமிழ் மக்கள், வாழ்வா சாவா போராட்டத்துக்கு மத்தியில், வெளிநாடுகளில் தஞ்சமடைந்தார்கள். வெளிநாடுகளில் தஞ்சமடைந்த தமிழ் மக்கள் தம்மை எந்தெந்தத் துறைகளில் வளர்த்துக்கொள்ள முடியுமோ அந்தந்தத் துறைகளில் வளர்ந்து தற்போது மிகப்பெரும் முதலீட்டாளர்களாகவும், துறை சார்ந்த வல்லுனர்களாகவும் இருப்பதால், இலங்கைக்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது - அதாவது, தமது தாய் மண்ணுக்குப் பிரச்சினை என்று வரும்போது உதவிக்கரம் நீட்ட அம்மக்கள் முன்வருவது இயல்பானதே.

அதனால் அரசு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றின் தடையை நீக்கியிருக்கிறது. புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்தான் தடை செய்யப்பட்டன. பயங்கரவாதத்தை தூண்டும் அமைப்புகளும், பயங்கர வாதத்துக்கு உதவிசெய்யும் வகையிலும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் செயல்படுவதாக இலங்கை அரசால் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால், தற்போது நாடு இக்கட்டான நிலையில் தவிக்கும்போது மெல்ல, சாதுர்யமாக இவ்வாறு தீர்மானம் எடுத்துள்ளது இலங்கை. தமக்கான அரசியல் தீர்வு, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதியென இவற்றை தமிழ் மக்கள் வாய் திறந்து கேட்டாலே தடைசெய்யப்பட்ட அமைப்பு, தடைசெய்யப்பட்டவர்கள் என்ற முத்திரையை இலங்கை அரசு கடந்த காலங்களில் பதித்து வந்தது இப்போது நினைவூட்டப்படவேண்டும்.

தொடர்ந்து பல வருடங்களாக பல்வேறு உலக நாடுகளும், தமிழ் அமைப்புகளும் தடைகளை நீக்கக் கோரிக்கை விடுத்துவந்த நிலையில், தற்போது தங்களுக்கென்று ஒரு தேவை ஏற்படும் நேரத்தில் இலங்கை அரசு சில புலம்பெயர் அமைப்புகளின் தடையை நீக்கியிருப்பது ஒருபக்கம் பார்த்தால் புலம்பெயர் தமிழ் மக்களின் நீண்டகால போராட்டத்திற்கு கிடைத்த ஒரு வெற்றிதான்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் முதலீடுகள் இலங்கைக்கு வருமானால் - தமிழ் மக்களுக்கான முழுச் சுதந்திரமும், இலங்கையில் வழங்கப்படுமானால் இலங்கையின் அபிவிருத்தி என்பது நிலைத்த, நீடித்தகாத இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், இந்தத் தடை நீக்கம் செய்தால் மட்டும் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்று பகற்கனவு காணுகிறது அரசு.

தடைநீக்கம் வந்த கையோடு இனி அதற்கான எதிர்ப்புக் குரல்களும் ஒலிக்க ஆரம்பிக்கும். வழமைபோல் ரணில், புலிப்பூச்சாண்டி கதைகள் அவிழ ஆரம்பிக்கும். என்னதான் தடைநீக்கம் வந்தாலும் தமிழருக்கெதிரான சிங்கள மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படவேண்டும். அந்த மாற்றம் வராத வரை தமிழர்கள் தொடர்ந்தும் எந்த நடவடிக்கைகள் எடுத்தாலும் அது விழலுக்கிறைத்த நீரே.

சுயலாபம் அற்று சிந்தித்து கனிந்துள்ள சூழலை சரிவரப் பயன்படுத்துங்கள்!

தமிழ் தரப்புகளுக்கு அமைச்சர் டக்ளஸ் பகிரங்க அழைப்பு

சுயலாபம் அற்று அறிவார்ந்து சிந்தித்துக் கனிந்துள்ள சூழலை சரிவரப் பயன்படுத்துமாறு தமிழ் அரசியல் தரப்பினருக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டு வருகின்ற எரிபொருள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், இன்னும் சில தினங்களில் குறித்த விவகாரத்திற்கு தீர்வை வழங்க முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பாக நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை (12.08.2022) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"இருண்டிருந்த ஒரு யுத்தில் அதை சபித்துக்கொண்டிராமல் ஒரேயொரு விளக்காக இருந்து இந்த நாட்டுக்கே ஒளி தருவதற்கு முன்வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை யாவரும் அறிவோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த நாடு முகங்கொடுத்திருந்த நெருக்கடி நிலைமையில் - இந்த அரசுக்கெதிராக எழுந்திருந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்த நாட்டின் பிரதமர் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்வருமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளிடமும். கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஆசையிருந்தும் அச்சம் காரணமாக பலரும் பின்வாங்கியும், நிபந்தனைகளை விடுத்தும், தப்பித்துக்கொண்டும் இருந்த நிலையில் இந்த சவாலை தைரியமாக ஏற்று முன்வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

எந்தவொரு விடயம் குறித்தும் நடைமுறைச் சாத்தியமாக சிந்தித்து முடிவெடுக்கும் நாம், இந்த நாட்டின் சவால்கள் மிகுந்த இக்காலகட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆற்றல் குறித்து திடமான நம்பிக்கைக்கொண்டிருந்தோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசியல் சதி காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்யவிருந்த நிலையில், பதில் ஜனாதிபதியாகவும் இடைக்கால ஜனாதிபதியாகவும் பொறுப்பேற்று எமது நாடு முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடித் தரக்கூடியவர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற உறுதியான நம்பிக்கை எம்மிடம் இருந்ததால் எமது ஆதரவை பகிரங்கமாகவே அவருக்கு வழங்க முன்வந்திருந்தோம்.

நாம் சுயலாபம் கருதி பொது நோக்கை வெறுத்து அலையும் கூட்டம் அல்ல. பொது நோக்கு கருதி சுயலாபங்களை வெறுக்கும் நாட்டம் கொண்டவர்கள் நாம். நாம் வெல்லும் பக்கம் நிற்பவர்கள் அல்ல. நிற்கும் பக்கத்தின் வெற்றிக்காக நாம் உழைப்பவர்கள். அவரை இவரை நம்புவது என்பதற்காப்பால் களிந்து வந்திருக்கும் சூழலை சரிவரப் பயன்படுத்தி எமது இலக்கை நாமே எட்டிவிட எம்மை நாமே நாம் முழுமையாக நம்புகிறோம்.

நாடாளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெல்வாரா, இல்லையா என்பதற்கப்பால் எமது தேசத்தின் இன்றைய பொருளாதார சவால்களை அவரே வெல்வார் என்றே அவரை நாம் அரசியல் துணிச்சலோடு ஆதரித்தோம். நாம் விரும்பியதுபோல் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறியிருக்கின்றார். தனது சிம்மாசன உரையில் அவர் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண சர்வகட்சி அரசுக்கான அழைப்பை விடுத்துள்ளார். இது ஓர் அரிய வாய்ப்பு. சகல தரப்புகளும் இணைந்து சக தமிழ்த் தரப்பும் இதை சரிவரப் பயன்படுத்த முன்வரவேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடக்கம் அதை ஏற்றவர்கள், ஏற்காதவர்கள் உட்பட வரலாறெங்கும் இதுவரைகாலம் எமக்குக் கிடைத்த அரிய வாய்ப்புகள் யாவும் பகிர்களுக்கு முன்னால் போடப்பட்ட முத்தாகவே கடந்து போய்விட்டன. இன்று களிந்துள்ள அரிய வாய்ப்பையாவது சுயலாபம் அற்று அறிவார்ந்து சிந்தித்து சரிவரப் பயன்படுத்த முன்வருமாறு சக தமிழ் தரப்பினருக்கும் மீண்டும் நான் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

ஒரு நாட்டின் தலைவர் என்றவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐம்பது அம்சத் திட்டத்தை முன்மொழிந்திருக்கிறார். அதில் தமிழ் பேசும் மக்கள் சார்பாக நாம் முன்வைத்திருக்கும் பத்து அம்சக் கோரிக்கைகளும் உள்ளடங்கியிருக்கின்றன. இவைகளை நடைமுறைப்படுத்த அரசியல் கட்சி வேறுபாடுகளைக் கடந்து செயலாற்ற முன்வருமாறு நான் சகல கட்சிகளையும் அழைக்கின்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவுகின்ற சவால்களுக்கு முகங்கொடுத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு இருப்போரில் சிறந்த தெரிவு ரணில் விக்கிரமசிங்கவே என நாம் நம்புகின்றோம். எமது தீர்க்கதரிசனமான முடிவு இறுதியில் வென்றது. அது எமது நடைமுறைச் சாத்தியமான வழிமுறைக்குக் கிடைத்த மேலுமொரு வெற்றியாகும். அதேபோன்று எமது தேசிய நல்லிணக்கம் நோக்கிய பயணத்திற்கு மேலும் வலுசேர்ப்பதற்கு இத்தெரிவு சாதகமானதாகும்.

ஜனாதிபதித் தெரிவில் தமது ஆதரவை நாளை சொல்கிறோம், நாளை மறுநாள் சொல்கிறோம், வாக்கெடுப்புக்கு முன் சொல்கிறோம், பின்னர் சொல்கிறோம் என நாங்கள் சாக்குப்போக்குக் கூறவில்லை.

சகல தமிழ் அரசியல் தரப்பினர்களும் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கலந்து கொண்டுவிட்டு, இப்போது கறுப்பாடுகளைத் தேடுவதாக பாசாங்குக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதியினது தெரிவிற்பில் தமிழ் அரசியல் தரப்புகளின் பங்களிப்பும் காத்திரமாக இருந்திருந்தால், அது எமது மக்களின் நலன்களுக்கு மேலும் வாய்ப்பாக அமையும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வழமையாக செய்கின்ற எமது மக்களுக்கான துரோகத்தனத்தையே இம்முறையும் சக தமிழ் அரசியல் தரப்புகள் செய்துவிட்டு, இன்று கறுப்பாடு அரசியலை முன்னெடுத்து வருகின்றன. புலித் தோல் போர்த்திய ஆடுகளாகத் தம்மைக் காட்டிக்கொள்கின்ற கறுப்பாடுகளும், கறுப்பாடுகளான கறுப்பாடு களும் கறுப்பாடுகளைத் தேடுவதாகக் கூறுகின்றன. இந்தக் கறுப்பாடு அரசியல் அநேகமாக அடுத்த ஏதாவதொரு தேர்தல் வரை மேய்ந்துகொண்டேயிருக்கும் என எமது மக்கள் முணுமுணுக்கின்றதையும் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

இன்று எமது நாடு முகங்கொடுத்திருக்கும் தலையாய பிரச்சினைகளை படிப்படியாகத் தீர்ப்பதற்கான நம்பிக்கை தரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், அனைத்துப் பிரச்சினைகளும் முழுமையாகத் தீர இன்னும் சில காலம் எடுக்கும். இந்தப் பிரச்சினைகளிருந்து மக்கள் பிரதிநிதிகளான நாம் ஒளிந்திருக்கவோ அல்லது தட்டிக் கழித்துச் செல்லவோ முடியாது.

அந்தவகையில் நான் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடற்றொழில் அமைச்சு சார்ந்து நாடளாவிய ரீதியில் வாழ்ந்து வருகின்ற கடற்றொழிலாளர்களை நேரில் சந்திப்பதென அந்தந்த பகுதிகளுக்கும் சென்று வருகின்றேன். இந்த நாட்டில் 10 இலட்சத்திற்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். சுமார் 60 ஆயிரம் வரையிலான நன்னீர் வேளாண்மை செய்கையாளர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி அடிப்படை வசதிகள் ரீதியில் - பொருளாதார ரீதியில் - பொருத்தமான சந்தை வாய்ப்பு ரீதியில் - சமூக ரீதியில் - கல்வி சுகாதார ரீதியில் என பல வழிகளிலும் இவர்களுக்கு உதவவேண்டும். அதேநேரம் இந்த நாட்டின் அனைத்து மக்களுமான போசாக்கையும் உறுதிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில் கடந்த வாரங்களில் தென் மாகாணம், மேல் மாகாணம், வடமேல் மாகாணம், வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணத்திலும் பல கடற்றொழில் பகுதிகளுக்குச் சென்று கடற்றொழிலாளர்களை நேரில் சந்தித்து வருகின்றேன்.

தற்போதைய நிலையில் எரிபொருள் பிரச்சினை காரணமாக கடற்றொழிலாளர் கள் தொழில் ரீதியாக பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். இரண்டு மூன்று மாதங்களாக தொழிலின்மையால் அவர்கள் வாழ்க்கையில் விரக்கதியடைந்திருப்பதை என்னால் அவதானிக்க முடிகின்றது. அந்த விரக்தி சில நேரங்களில் ஆக்ரோசமாகவும் வெளிப்படுகின்றன. அது இயல்பு.

எனவே, எமது கடற்றொழிலாளர்களின் எரிபொருள் பிரச்சினைக்கான தீர்வு தொடர் பில் நான் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றேன். இன்னும் சில தினங்களில் அப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை இந்தச் சபையில் முன்வைக்கின்றேன்.

இத்தகைய அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்கின்ற நிலையில், எமது ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தேசிய உற்பத்தியை அதிகரித்து கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதுடன், அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் நாட்டு மக்களின் போசாக்கு நிலையை உறுதிப்படுத்துவதற்கும் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையிலான நியாயமான விலையை பேணுவதற்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும் என நம்புகின்றேன்.

இந்த நாட்டினதும் நாட்டு மக்களினதும் மேம்பாட்டினை பிரதிபலிப்பதாகவே ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை அமைந்திருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தமிழ் மக்கள் பல காலமாக முகங் கொடுத்து வருகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதானது அதில் ஒரு முக்கிய விடயம். எமது மக்களின் அன்றாட அத்தியாவசிய பிரச்சினைகளை நாம் எம்மால் முடிந்தளவு தீர்த்து வருகின்ற அதேநேரம் சமகாலத்திலேயே அரசியல் தீர்வு குறித்தும் முயற்சித்து வருகின்றோம்.

அந்தவகையில் எம்மால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டிருந்த எமது அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து முன்நோக்கிச் செல்வதற்கும் மேலும் காலத்தை வீணடிக்காமல் சக தமிழ்த் தரப் பினரும் முன்வர வேண்டுமென மீண்டும் பகிரங்க வேண்டுகோளை விடுக்கின்றேன்.

மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் உரையில் விசேட அவதானம் செலுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பல்லாண்டு காலமாக அம்மக்கள் முகங்கொடுத்து வருகின்ற சமூக, பொருளாதார மற்றும் அடிப்படை வசதிகள் சார்ந்து அம்மக்களை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இன, மத, கட்சி போன்ற அனைத்து பேதங்களையும் கடந்து திறமை மற்றும் தகுதி அடிப்படையில் மக்களது எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கின்ற அடிப்படையை உறுதிப்படுத்துவதானது மிக முக்கியமான விடயமாகும். இது இந்த நாட்டின் சிறந்ததொரு எதிர்காலத்திற்கான முன்னேற்பாடாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்...)

இன்றைய நாளில்...

★ 1519 – பனாமா நகரம் நிறுவப்பட்டது.

★ 1914 – பனாமா கால்வாய் திறக்கப்பட்டது.

★ 1947 – முகமது அலி ஜின்னா பாகிஸ்தானின் முதலாவது ஆளுநராக கராச்சியில் பதவியேற்றார்.

★ 1948 – கொரியக் குடியரசு உருவானது.

★ 1963 – மூன்று நாள் கிளர்ச்சியை அடுத்து கொங்கோ குடியரசின் அரச தலைவர் புல்பார்ட் யூலோ ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1971 – பஹ்ரைன் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1975 – பங்களாதேஷில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரச தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் மற்றும் அவரது குடும்பத்தினர் (ஷேக் ஹசீனா தவிர) அனைவரும் கொல்லப்பட்டனர்.

★ 2013 – ஒலிங்கிட்டோ என்ற புதிய புலாலுண்ணும் மிருக இனத்தை அமெரிக்கக் கண்டத்தில் கண்டுபிடித்திருப்பதாக சிமித்சோனிய நிறுவனம் அறிவித்தது.

★ 2015 – வட கொரியா தனது நேரத்தை அரை மணிநேரம் பின்னோக்கி நகர்த்தியது. இது ஒருங்கிணைந்த அனைத்துலக நேரத்திலிருந்து 8 மணி முன்னோக்கியதாகும்.

நக்கல் நமசிவாயம்

மனுசிக்காரியோட தாய்லாந்து போனதே பெரும்பாடு... அதிலயும் வெளியே போகக் கூடாதென்டு சொன்னா எப்படி இருக்கும் பாருங்கோ...

கொழும்பு - பதுளை சொகுசு புகையிரத சேவை ஆரம்பம்

கொழும்பிலிருந்து பதுளைக்கு, நேற்று முன்தினம் (13) முதல் சொகுசு புகையிரதம் சேவையில் ஈடுபடவுள்ளதாக, போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து பதுளைக்கு, வார இறுதியில் சொகுசு புகையிரதத்தை சேவையில் ஈடுபடுத்தும் போக்குவரத்து அமைச்சின் திட்டத்திற்கு அமைவாக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த புகையிரதத்துக்கு 'எல்ல ஒடெஸ்ஸி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த புகையிரதம் ஒவ்வொரு சனிக்கிழமையும் அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டை யிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 3.55 மணிக்கு பதுளையைச் சென்றடையும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பதுளை யிலிருந்து காலை 9.50 மணிக்குப் புறப்படும் புகையிரதம், இரவு 7.20 மணிக்கு கொழும்பை வந்தடை யும்.

கம்பஹா, வெயாங்கொட, பொல்கஹவெல, ரம்புக்கன, பேராதனை, கண்டி, நாவலப்பிட்டி, நானுஓயா, ஹட்டன், தியத்தலாவை, பண்டார வளை, எல்ல மற்றும் பதுளை ஆகிய புகையிரத நிலையங்களில் இந்த சொகுசு புகையிரதம் நிறுத்தப்படும்.

யானை – மனித மோதல் சம்பவங்கள் அதிகரிப்பு

மின்சாரவேலி அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துமாறு செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார் அமரவீர

யானை மற்றும் மனித மோதலை நிறைவுக்கு கொண்டு வருவதற்காக மின் வேலிகளை அமைப்பதற்கு, தேவையுடைய சகல மாவட்டங்களுக்கும் அடுத்த வருடத்துக்குள் மின்சார வேலிகளை அமைத்து முடிப்பதற்கு விவசாய, வனஜீவிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

யானை – மனித மோதலை அடுத்த வார இறுதியில் முடிவுக்கு கொண்டுவருவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கையாக, விவசாய அமைப்புகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும், அதற்காக விரைவான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு செயலாளர் சந்ரா ஹேரத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் யானை - மனித மோதல் அதிகரித்துள்ளது. அதற்கமைய, 2019ஆம் ஆண்டு 407யானைகளும், 122மனிதர்களும் உயிரிழந்துள்ளனர்.

2020ஆம் ஆண்டு 328யானை மரணங்கள் பதிவாகியுள்ளதுடன் 112பேர் உயிரிழந்துள்ளனர். 2021ஆம் ஆண்டு 375 யானைகள் உயிரிழந்துள்ளதுடன் 142பேர் யானை - மனித மோதலினால் உயிரிழந்துள்ளதாக அறிக்கைகள் குறிப்பிடுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு முதல் நான்கு மாதங்களில் யானை மனித மோதலினால் 47யானைகள் உயிரிழந்துள்ளதுடன் 34பேர் உயிரிழந்துள்ளனர். இந்த யானைகளில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களினால் 13யானைகளும், மின்சார வேலியில் சிக்கி 17யானைகளும், ஹக்க படஸ் என் மருந்துவகையினால் 19யானைகளும், காயங்களுக்குள்ளாகி 08யானைகளும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சஞ்சீவி' பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் திறந்துவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்ட பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான 'சஞ்சீவி' மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவக வளாகத்தில் திறந்து வைக்கப் பட்டது.

யாழ். மாவட்ட சமாசத்தின் உப செயலாளர் திருமதி சுமதி வசந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் வடமாகாண பணிப்பாளர் ரா.சசீலன், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி சி.அஞ்சனா தேவி மற்றும் யாழ். மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.வேணுகாராணி ஆகியோர் கலந்துகொண்டு சஞ்சீவி விற்பனை நிலையத்தை திறந்து வைத்திருந்தனர்.

மேலும் நிகழ்வில் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகான இணைப்பாளர் கு.ரவிக்குமார், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், பனை அபிவிருத்தித் திணைக்கள வடமாகான முகாமையாளர் லோகநாதன், விழுது சமூக மேம் பாட்டு அமைய நிதி முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

குறித்த சஞ்சீவி மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையமானது, விழுது சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அவுஸ்திரேலியன் எயிட் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

181 கொரோனா நோயாளர்கள் அடையாளம்!

நாட்டில் நேற்று முன்தினம் (13) கொரோனா தொற்றுக்குள்ளான 181 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 67ஆயிரத்து 916ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான ஐந்து பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுயலாபம் அற்று...

மேலும், எமது புலம்பெயர் உறவுகளுடன் உறவுகளை பலப்படுத்திக்கொள்வது, தடைசெய்யப்பட்டுள்ள புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் மீதான தடைகளை அகற்றுவது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போன உறவுகளுக்கான பரிகாரம்,, எமது மக்களின் காணி, நிலங்களை விடுவித்துக்கொள்வது உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியும் வருகின்றேன்.

அதேநேரம் ஜனாதிபதி பகிரங்கமாக விடுத்திருக்கின்ற சர்வகட்சி அரசாங்கம் குறித்த அனுப்பை அனைத்து தரப்பினரும் ஏற்க முன்வருவது காலத்தின் அவசியமாகும் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது மக்கள் மீண்டும் சுதந்திரமானதும் அனைத்து உரிமைகளையும் பெற்ற நியாயமான வாழ்க்கைத்தரத்தைக் கொண்டவர்களாக வாழ்வதற்கான எதிர்கால அடிப்படையை நாம் உருவாக்க வேண்டும்.

கடந்த கால தவறுகள் அனைத்தும் திருத்தப்படல் வேண்டும்.

அந்த வகையில் ஜனாதிபதி இந்த நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன் கருதி எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் நாம் பக்கபலமாக இருப்போம் என்பதைக் கூறிக்கொண்டு இந்த சபையில் எமது அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமைக்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரமுறைமைக்கும் இடையிலான சமபலத்தை பேணக்கூடிய வகையில் 22ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் இந்த வருடத்திற்கான மீளாய்வு வரவு-செலவுத் திட்டமும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. எனது அமைச்சின் கடற்றொழில் அமைச்சின் முன்னுரிமையாக உணவு பாதுகாப்பையும் கடற்றொழில் சார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாத்து உயர்த்துவதையும் அதேவேளை, இந்த கடற்றொழில் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான உட்கட்டமைப்பிற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வுள்ளேன். கடைசியாக கலேந்திரனது நாடாளுமன்ற உரையில், தனது தம்பி யுத்த காலத்தில் அரச படைகளால் கடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகவும் அதில் எனது பெயரைக் குறிப்பிட்டு எனக்கு சம்பந்தம் இருப்பதாகவும் வெளிப்படுத்தியிருந்தார். அது உண்மைதான். அவரது தம்பி மாத்திரம் அல்ல, பல நூற்றுக்கணக்கானவர்களை நான் விடுவித்திருக்கின்றேன்.

அந்தவகையில் அதை வெளிப்படுத்திய அவருக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, துரதிர்ஷ்டவசமாக அவரது குழுவினரால் காணாமலாக்கப்பட்டோரில் எனது தம்பி உட்பட எனது பாசத்திற்குரிய பல உறவுகளை இன்றுவரையிலும் நான் தேடிக்கொண்டே இருக்கின்றேன் என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்" - என்றும் தெரிவித்துள்ளார்.

மருதமடு மாதா திருத்தல
வருடாந்த திருவிழா
ஆகஸ்ட் 15 காலை 6 மணி முதல்
நேரலையாக ரிவி தெரணவில்...

tv தெரண

பராசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு விழா நிகழ்வு

(சாவகச்சேரி நிருபர்)

வடமராட்சி, மாவடி பராசக்தி விளையாட்டுக் கழகத்தின் பொன்விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (13) கழக மைதானத்தில் இடம் பெற்றிருந்தது.

குறித்த ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்திருந்தார். ஆண்டு விழா நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக கழகத்தின் மூத்த வீரர்கள் கௌரவிப்பு, சிறார்களுக்கான பரிசளிப்பு, பாரம்பரிய விளையாட்டான கயிறு இழுத்தல் போட்டி ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

அதிக விலைக்கு பெற்றோலை விற்பனைசெய்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் கைது

வவுனியாவில் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்தமை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா நகர மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையிலுள்ள எரிபொருள் மீள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றும் எரிபொருள் நிரப்பும் ஊழியர் அங்கு கொள்கலன்களில் எரிபொருளை சேமித்து அருகேயுள்ள வியாபார நிலையத்தில் வைத்து, ஒரு லீற்றர் பெற்றோலை ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தவர் என்ற குற்றச்சாட்டில் குறித்த நபரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 16 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை 45ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடத் தீர்மானம்

அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தெரிவிப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை 45ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்படவுள்ள சோளச்செய்கை தொடர்பில் வினவியபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எதிர்பார்த்துள்ள இலக்கினை அடைவதற்கு உரிய காலத்துக்கு தேவையான உரம், விதைகள் மற்றும் கிருமிநாசினிகள் என்பன கிடைக்குமாக இருந்தால் சோளச்செய்கையினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். அதனை உரிய காலத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் எமக்கு உறுதியளித்துள்ளார்.

ஆகையால், சோளச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தயக்கமின்றி தமது செய்கையினை ஆரம்பிக்கமுடியும். அது சம்பந்தமாக சோளச்செய்கையில் ஈடுபடும் விவசாய சங்கங்களுடன் விசேட கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளோம். 2021 - 2022ஆம் ஆண்டில் சோளச்செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான இராசாயன உரம் அதாவது யூரியா மற்றும் தேவையான கிருமிநாசினிகள் இல்லாத காரணத்தினால் சோளச்செய்கை அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரமின்றி முழு நாட்டிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் விளைச்சலும் குறைவடைந்துள்ளது.

2020-2021 சிறுபோகத்தின்போது அநுராதபுர மாவட்டத்தில் 43,000 மெட்ரிக் தொன் சோளம் அறுவடை கிடைத்துள்ளது. தற்சமயம் மாவட்டத்தில் சோளச்செய்கையில் ஈடுபடுபவர்கள் தமது நிலங்களை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர்களுடன் அண்மையில் அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தனர்.

இம்முறை சோளச் செய்கையாளர்களுக்கு நியாயமான விலைபெற்றுக்கொடுப்பதற்கு விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதுடன் ஒரு கிலோ சோளத்தினை 16ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆகையால், இம்முறை சென்ற ஆண்டுகளை விடவும் அதிகளவிலானவர்கள் சோளச் செய்கையினை மேற்கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம் என அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

ஸ்திரமற்ற அரசியலால் நாடு இன்று வேட்டைக்களமாக மாறி விட்டது

தேசிய பாதுகாப்பும் நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டதாக சஜித் சாடல்

நாட்டில் தற்போது வரை நிலவிவரும் ஸ்திரமற்ற தன்மை மற்றும் வங்குரோத்து நிலைமைகள் காரணமாக பலம் வாய்ந்த நாடுகளுக்கு வேட்டைக் களமாக இலங்கை மாறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதன் மூலம் தேசிய பாதுகாப்பு கூட நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ராஜபக்ஷக்களால் இந்நாட்டின் முதுகெலும்பு உடைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியில் நேற்று முன் தினம் (13) நடைபெற்ற கட்சி ஆதரவாளர் களுடனான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி பிரதான அமைப்பாளர் சட்டத்தரணி எரந்த வெலியங்க இதனை ஏற்பாடு செய்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், 2019 ஜனாதிபதித் தேர்தலில் "ஐக்கிய பாதை"க்கு பதிலாக "தவறான பாதையை" தெரிவு செய்ததன் அவலத்தை இன்று நாடு எதிர்கொண்டுள்ளது. இந்த நாட்டை கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய மக்கள் சக்திக்கே உண்டு.

தற்போதைய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டமை அரசியலமைப்பு ரீதியாக சரியானது என்றாலும், அங்கீகாரம் மற்றும் மக்கள் அபிப்பிராயம் என்ற அடிப்படையில் இது முற்றிலும் மாறுபட்ட நிலை.

கடந்த காலத்தை விட நிலுகாலம் முற்றிலும் மாறுபட்டது. அந்நாட்களில், பெரும்பாலும் அரசியல் முடிவுகளை எடுப்பதில் முன்னுரிமை பெற்றது பெரியவர்களே என்றாலும், இன்று இளம் தலைமுறையின் அதை வீட்டில் கூட பெற்றுள்ளனர்.

தேர்தலில் முடிவெடுப்பது குறித்து வீட்டில் செலவாக்கு செலுத்துவது இளைஞர் சமுதாயத்தினரின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களின் பிரகாரமே. அவர்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் புரிந்து கொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு.

தம்மிடம் இரத்தம் சிந்திய வரலாறு இல்லை. தமது வங்கிக் கணக்குகளில் போதைப்பொருட்கள் விற்ற பணம் இல்லை. தம்மிடம் எந்தவித கபடத்தனமும் இல்லை. ஓர் அணியாக இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொள்கிறோம் என்றார்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதி பிராந்தியப் பணிப்பாளர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிரதிப் பணிப்பாளர் கிறிஸ்டோப் பஹுட், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை அண்மையில் சந்தித்தார்.

ஐந்து தசாப்தங்களுக்கும் மேல், குறிப்பாக கடினமான காலங்களில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினர் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிலையான ஆதரவை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி பாராட்டினார். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்துடன் நெருக்கமான ஒத்துழைப்பைத் தொடருவதற்கு இலங்கை ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக, தற்போதைய சவால்களை சமாளிப் பதற்காக இலங்கை அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டமுன்னுரிமை மற்றும் மீட்பு நடவடிக்கை களில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அபிவி ருத்தித் திட்டத்தின் தொடர்ச்சியான ஆதரவையும் ஒத்துழைப்பையும் பிரதி பிராந்தியப் பணிப்பாளர் பஹுட் உறுதிபடுத்தினார்.

பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப் பதற்கும், தற்போதைய சவால்களில் இருந்து நிலையான மீட்சியை உறுதி செய்வதற்கும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குமான வழிகள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.

உடப்பில் வீடு புகுந்து நகை - பணம் திருட்டு

உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(உடப்பு நிருபர்)

உடப்பு 4ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள வீடொன்றில் 41 பவுண் தங்க நகைகள், 25ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் 250 பவுன்ஸ் (UK) பணமும் நேற்று (14) திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர்களான ஜங்கரநாதன் முகுந்தமலர் தம்பதியினரால் உடப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இவர்கள் லண்டனிலிருந்து கடந்த 15 நாட்களுக்கு முன்னர் உடப்பு திருவிழாவுக்காக நாட்டுக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில், தமது வீடு குடிபுகும் நிகழ்வு உள்ளிட்ட மேலும் சில நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு நித்திரையிலிருந்த சந்தர்ப்பத்தில் வீட்டின் முன் அறையில் குறிப்பிட்ட பொருட்களை வைத்துள்ளனர். ஆயினும், வீட்டின் யன்னலுக்கு கிறில் கம்பிகள் எதுவும் பொருத்தப்படவில்லை.

யன்னல்களை அகற்றிவிட்டு உட்புகுந்த திருடர்கள் இவ்வாறு நகைகளையும், பணத்தையும் களவாடிச் சென்றுள்ளனர். மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பாகிஸ்தானின் 75ஆவது சுதந்திரதின நிகழ்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பாகிஸ்தானின் 75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் சுதந்திரதின நிகழ்வுகள் மிக எளிமையாக நேற்று (14) நடைபெற்றன.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஒய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர்பாரூக் பர்கி கலந்துகொண்டு பாகிஸ்தான் நாட்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதன் பின்னர் பாகிஸ்தான் நாட்டின் தேசிய கீதம் இசைக்கப் பட்டது.

பாகிஸ்தான் பிரதமர் செபீஸ் செரீபின் சுதந்திரதினச் செய்தியை உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடக இணைப்பாளர் கல்கும் கைர் வாசித்தார். பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் அல்வியின் சுதந்திரதின செய்தியை உயர்ஸ்தானி காரியத்தின் வர்த்தக இணைப்பாளர் அஸ்மா கமால் வாசித்தார்.

இதன்போது சுதந்திரதின ஞாபகார்த்தமாக கேக்கும் வெட்டப்பட்டது.

இதன்போது உயர்ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் பிள்ளைகளும் உயர்ஸ்தானிகருடன் இணைந்து கேக்கை வெட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதில் பாகிஸ்தான் உயர்தானிகராலய அதிகாரிகள், ஊழியர்கள், இலங்கை வாழ் பாகிஸ்தான் நாட்டுப் பிரஜைகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

ஓய்வுபெற்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை

(அநுராதபுரம் செய்தியாளர்)

ஓய்வுபெற்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை பொல்லால் தாக்கி கொலை செய்த சம்பவமொன்று அசரிக்கம பகுதியில் இடம்பெற்றுள்ளதாக அநுராதபுரம் பரன்கஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பரன்கஸ்வெவ பொலிஸ் பிரிவிலுள்ள கம்பிரி கஸ்வெவ அசரிக்கம பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர்.

கம்பிரிகஸ்வெவ அசரிக்கம பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய கே.சரீப்தீன் என்றழைக்கப்படும் ஒய்வுபெற்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவதினத்தன்று ஜும்மா தொழுகையின் பின்னர் பள்ளி றிர்வாகத்திற்கு சில உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இதன்போது அப்பகுதியிலுள்ள சிலர் பள்ளிவாசல் நிருவாகத்தினருடன் ஏற்படுத்திக்கொண்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றுள்ள நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற அநுராதபுரம் மேலதிக நீதவானினால் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டதையடுத்து, பிரேத பரிசோதனை களை மேற்கொள்வதற்காக சடலம் அநுராத புரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட் டுள்ளது. அதனை தொடர்ந்து அங்கு நடத்தப் பட்ட பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மூவரை கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொலைக்கு பயன்படுத்திய பொல்லையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ள நிலையில் அநுராதபுரம் பரன்கஸ்வெவ பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சீனா - பாகிஸ்தான் போர்க்கப்பல்களுக்கு அனுமதித்தமை இலங்கை இராஜதந்திரத்துக்கு கிடைத்த முதலாவது தோல்வி

ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா மன்றத் தலைவர் துரைரெட்ணம் சுட்டிக்காட்டு

(கனகராசா சரவணன்)

இந்தியாவை பகைத்துக்கொண்டு சீனா மற்றும் பாகிஸ்தான் போர்க்கப்பல்கள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி கொடுத்தது இலங்கை இராஜதந்திரத்துக்கு கிடைத்த முதலாவது தோல்வி. எனவே, இந்தியா விவகாரத்தில் இலங்கை ஓர் அணிசேரா கொள்கைகளை சரியாக கடைப்பிடிக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்து மேலதிகமான உதவிகளைப் பெறுவதற்கு வாய்ப்புகள் உருவாகும் - என கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினரும் ஈபி.ஆர்.எல்.எவ். பத்மநாபா மன்றத் தலைவருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பலாச் வீதியிலுள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இன்றுள்ள சூழ்நிலையில் இந்த அரசு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்கின்றதாக சொல்லப்படுகின்றது. ஆனால், இந்த ஜனாதிபதியை பொறுத்தளவில் கடந்த காலத்தில் அம்பாந்தோட்டை விவகாரத்தில் கலைக்குரிய விடயம், அப்போது எதிர்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் இருக்கும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்துட்டது என்பதை இன்றைய சமூகம் மறந்துவிடக்கூடாது

அம்பலப்படுத்தப்பட்டு வெளியில் கொண்டுவர வேண்டிய விடயங்கள் மூடக்கிவிடப்பட்டிருந்தன. இந்த விவகாரத்தில் இலங்கை அரசு இனிமேலாவது இந்தியாவை பகைக்காமல், ஒரு நாட்டின் அரசை செயற்பட வைப்பதற்கு அணிசேரா செயற்பாடுகளும் அணிசேர்கூடிய செயற்பாடுகளும் ஒரு தத்துவார்த்த ரீதியான கொள்கையளவில் இருக்கவேண்டும்.

இலங்கை அரசைப் பொறுத்தளவில் நீண்ட காலமாக உள்ளிப்பாக இராஜதந்திர செயற்பாடுகள் செயற்பட்டுவந்தன. ஆனால், குறிப்பிட்ட காலம் போகப் போக எடுப்பார் கை பிள்ளைபோல் தனிநபர் செயற்பாடுகளுக்காக இராஜதந்திர செயற்பாடுகள் முடக்கிவிடப்பட்டிருந்தன. இந்த வகையில் கடந்த கால செயற்பாடுகள் இலங்கை அரசை கண்டிக்கக்கூடியதாக இருந்தன. இந்தியா விவகாரத்தில் இலங்கை ஓர் அணிசேரா கொள்கைகளை சரியாக கடைப்பிடிக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்து மேலதிகமான உதவிகளை பெறுவதற்கு வாய்ப்புகள் உருவாகும்.

நாடு எதிர்நோக்குகின்ற அரசியல் ரீதியான விடயங்களில் இலங்கை அரசாங்கம் செயற்பட முடியாமல் அரசியல் தலைமைகள் செயற்படாமல் பின்வாங்குகின்ற நிலைமையில் மக்கள் திரண்டு எழுந்து போராடுகின்றபோது பிரதமர், ஜனாதிபதி உட்பட அனைவரையும் மாற்றக்கூடியவாறு வெகுஜன போராட்டம் வெற்றியளித்து தற்போது அரசு ஓரளவிற்கு செயற்பட்டதொடங்கியுள்ளது

இதனை முன்னேற்றகரமாகக் கொண்டு செல்வதற்கு அரசு சர்வகட்சி அரசாங்கத்தை செயற்படுவதற்கான செயல்வடிவம் கொடுக்கப் பட்டுள்ளது ஆனால், சர்வகட்சி ஆட்சிமுறை என செல்லிக்கொண்டு குறிப்பிட்ட சில கட்சிகளுக்குள் தங்களது செயற்பாடுகளை முடக்கிவிட்டிருப்பது என்பது ஏற்புடையதல்ல.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரன் ஆகிய இருவருக்கும் இடையில் கருத்து மோதல் என்பது அந்த தலைமையின் பலவீனத்தைக் காட்டுகின்றது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரண்டு பிரதிநிதிகளுக்குள் எழுப்படுகின்ற கருத்துகளை தீர்க்கக்கூடியவாறு தலைமைகள் ஒரு கலந்தை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

அதைவிடுத்துவிட்டு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரி, பிழை என்ற கருத்துகளை பொதுமக்கள் முன் விவாதிப்பதென்பது அந்த கட்சியின் பலவீனத்தைக் கொன்டுவரும் என்ற அடிப்படையில் உடனடியாக தமிழரசுக் கட்சியும் தமிழ் ஈழவிடுதலை இயக்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகளை தீர்ப்பதற்கான ஒரு கலந்தை சரியாக அமைத்து உள்ளுக்குள் எழுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - மேலும் அவர் தெரிவித்தார்.

வாழைச்சேனை ஓமனியாமடுவில் உள்ளூர்த் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமனியாமடு பிரதேசத்தில் சட்டவிரோத உள்ளூர்த் தயாரிப்பு துப்பாக்கியுடன் 27 வயது இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் (13) கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை (13) ஓமனியாமடு பிரதேசத்தில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அந்தப் பகுதி காட்டிலிருந்து வீட்டிற்கு உள்ளூர்த் தயாரிப்பு துப்பாக்கியை எடுத்துக்கொண்டுவந்த 27 வயது இளைஞனை மடக்கிப்பிடித்து கைதுசெய்ததுடன், துப்பாக்கியை மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் நேற்று (14) ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

போடியார் புலம்பல்!



புலம்பெயர் அமைப்புகளின் தடையை நீக்கிப்போட்டாராம் ரணில் மாத்தையா

சோக்கான வேலதான். இதுபோல வடக்கு கிழக்குப் பகுதிகளில நடக்கிற சிங்கள குடியேற்றங்களையும், பேசாம காணி புடிக்கிற கள்ள வேலைகளையும் நீக்கோணும் ஐயா.

அப்பதான் புலம்பெயர் ஆக்கள் இஞ்ச முதலீடுகள கொண்டுவருவாங்க என்ன நான் சொல்லுறது சரி எலுவா?

மேலதிக வகுப்புக்கு சென்ற மாணவி மோட்டார்சைக்கிள் விபத்தில் காயம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, தொறவுப்பொத்தானை பிரதான வீதி பன்குளம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மாணவி படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (13) காலை இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் எட்டாம் தரத்தில் கல்வி பயின்றுவரும் எள்.சகினி ஹன்சிகா (13 வயது) என்ற மாணவியே படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மஹதிவுல்வெவ பகுதியிலிருந்து பிரத்தியேக வகுப்பிற்கு சென்று சக வகுப்பு மாணவர்களுடன் நடந்துசென்று கொண்டிருந்தபோது நேராக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபருக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சாரதி மதுபோதையில் இருந்ததாகவும் இவர் மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய வியோதிபர் எனவும் தற்போது விபத்துடன் தொடர்புடைய இருவரும் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த மாணவியை மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு; ஆனால் அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை

திகா எம்.பி. தெரிவிப்பு

சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையுமானால் அதற்கு ஆதரவு தெரிவிப் போமே தவிர, அமைச்சுப் பதவிகளை ஏற்க மாட்டோம் - என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் இடம்பெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவருும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தொடர்ந்து பேசுகையில்,

தமிழ் முற்போக்கு கூட்டணி மக்களின் நலன் கருதியும் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் கருதியும் நிதானமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையுமானால் அதற்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவிப்பதாக ஏற்கனவே நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமாகவே நாட்டு மக்களின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் ஆறு மாதத்திற்கு மோசமாக காணப்படுமென ஜனாதிபதியும் அறிவித்துள்ளார். மேலும், இன்னும் இரண்டு வருடங்களுக்குப் பிறகே நாட்டின் பொருளாதார நிலைமை ஓரளவுக்கு சீரடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான தொரு சூழ் நிலையில் அமைச்சுப் பொறுப்பை ஏற்பதனால் மக்களுக்கு எந்தவிதமான அபிவிருத்தியும் செய்ய முடியாது. கௌரவத்துக்காக அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டு மக்களுக்குச் சேவை செய்யாவிட்டால் மக்கள் என்னை தூக்கி எறிந்து விடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் தோற்தலுக்குப் பிறகு அமைச்சுப் பொறுப்பு ஒன்றை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு சேவை செய்வதே பொருத்தமென நினைக்கின்றேன் - என்றார்.



இலங்கை சலுசல நிறுவனத்திற்குச் சொந்தமானதும் கடந்த 6 வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த கலதொர நியங்கொட கைத்தறி நெசவு நிலையம் மற்றும் அதற்கு சொந்தமான 1.5 ஏக்கர் காணி என்பவற்றை மத்திய மாகாண சபைக்கு கையளிக்கும் நிகழ்வு மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சலுசல நிறுவனத்தின் தலைவர் டென்சில் இந்தரஜித் பெரோ மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகியோர் கலந்துகொண்டனர். (கண்டி நிருபர்)

இந்திய நாடு எமக்கு உற்ற நண்பனாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் செயற்படுகின்றது

இராதாகிருஸ்ணன் எம்.பி.

(நுவரெலியா நிருபர்)

இந்தியா தனது 75ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் இந்திய நாட்டை தலைமை தாங்கி சிறப்பாக நிர்வகித்து வருகின்ற பிரதமர் நரேந்திர மோடி உட்பட இந்திய நாட்டின் அனைவருக்கும் மலைய மக்களின் சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன் - என மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அயல்நாடான இந்தியா எமது நாட்டிற்கு எப்போதெல்லாம் இன்னல்கள் ஏற்பட்டதோ அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஓர் உற்றநண்பனாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் செயற்பட்டு எங்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்துவருகின்ற மிகச் சிறந்த வழிகாட்டியாகும்.

அண்மையில் எமது நாடு பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவை சந்தித்தபோது உடனடியாக உதவிக்கரம் நீட்டியது இந்திய நாடே. இந்தியா எமக்கு அந்த நேரத்தில் உதவி செய்யாவிட்டால் நாம் பட்டினியால் இறந்திருப்போம். இந்தியா எமக்கு எப்போழுதுமே செய்கின்ற அனைத்து உதவிகளும் அதேகாலவை நன்கொடையாகவே கிடைத்திருக்கின்றன. ஆனால், ஏனைய நாடுகளான சீனாவைப்போல எம்மை கடன்சுமையில் தள்ளிவிடவில்லை.

நாம் இலங்கையர்களாகஇருந்தாலும் இந்தியாவில் இருந்து வருகைதந்தபோது அங்கிருந்து கொன்டு வந்த அனைத்து கலை, கலாசாரத்தையும் இன்றும் பாதுகாத்து வருகின்றோம். இந்திய நாடு இன்னும் வளர்ச்சி கண்டு உலகின் தலைசிறந்த நாடுகளில் ஒன்றாக வளர வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன். அதனை செய்வதற்கு சரியான தலைவராக பிரதமர் நரேந்திர மோடி செயற்பட்டு வருகின்றார். பாரத பிரதமர்களில் மோடியின் செயற்பாடு காரணமாக பாரதம் இன்று அனைத்து துறைகளிலும் அசர வளர்ச்சி கண்டு வருவது எம் அனைவருக்கும் பெருமையாகும் - என்றார்.

மக்களின் நலன்கருதி அரசியல் தீர்மானங்களை எடுப்போம்

உதயா எம்.பி.

மக்களின் நலன்கருதியே தொழிலாளர் தேசிய சங்கம் அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்கும் - என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

ஹட்டனில் இடம்பெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் உதயகுமார் எம்.பி. மேலும் பேசுகையில்,

தமிழ் முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் எப்போதும் மக்கள் நலன் கருதியே அரசியல் தீர்மானங்களை எடுக்கக் கூடியவர். அதற்கேற்பவே எமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வங்குரோத்து நிலைமை காரணமாக தோட்டத் தொழிலாளர் உட்பட அனைத்து தரப்பினரும் பாதிப்படைந்துள்ளோம். எமது நாடு இறக்குமதியில் தங்கியுள்ள ஒரு நாடாகும். எமது நாட்டின் ரூபாவின் பெறுமதி குறைந்து பணவீக்க நிலைமை அதிகரித்துள்ளது.

இதனால் நாளுக்கு நாள் எமது நாடு பொருளாதார ரீதியாக பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று ஏற்படுமானால் மக்களின் நலன் கருதி வெளியிலிருந்து நாம் ஆதரவு கொடுப்போம். அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க மாட்டோம் - என்றார்.

பெரண்டினா நிறுவனத்தினால் "2022ஆம் ஆண்டு மனிதாபிமான" என்ற தொனிப்பொருளில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட இன்ஜல்ட்டரி தோட்டத்தில் வசிக்கும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் மூன்று மாதங்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு பெரண்டினா நிறுவனத்தின் முகாமையாளரினால் அண்மையில் வழங்கப்பட்டது. (கிளிநித்தேனை நிருபர்)

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர்வழங்கல் திட்டத்திலிருந்து இரு நாட்கள் கறை படிந்த நீர் விநியோகம்

பொதுமக்கள் அசௌகரியம் – பல இலட்சம் லீற்றர் நீர் வீண்விரயம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிராந்திய நீர்வழங்கல் காரியாலயத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை நீர்வழங்கல் திட்டத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை (12) மாலைமுதல் சனிக்கிழமை (13) மாலைவரை அப்பகுதி நீர்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட கறை படிந்த சிவப்பு நிற நீரினால் பல்லாயிரக்கணக்கான நீர்ப் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை கொண்டவட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர்வழங்கல் திட்டங்களுக்கு வழங்கப்படும் குடிநீரே கறை படிந்த பாவிக்க முடியாத நீராக வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாலைமுதல் திடீரென ஏற்பட்ட இந்நிலையினால் நீர் பாவனையாளர்கள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டு செய்வதறியாது குடிப்பதற்கோ தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியாமல் திண்டாடினார்கள்.



அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின்மூலம் நீர்வழங்கப்பட ஆரம்பித்தவுடன் வீடுகளில் கிணறுகளோ வேறு எவ்வித நீர்பெறும் மார்க்கங்களோ இல்லை. முற்றுமுழுதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீரை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான நிலையில், கடந்த இரு நாட்கள் இடம்பெற்ற சம்பவமானது பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடைக்கிடையே ஏற்பட்டது மட்டுமல்லாமல், சிலவேளைகளில் ஒரு வகை வாசமான நீரும் வருகை தருவதுண்டு.

மக்கள் சகல துறைகளிலும் பாதிக்கப்பட்டு தமது அன்றாட வாழ்க்கையை முன்கொண்டு செல்லமுடியாத நிலையில், இருக்கும்போது இவ்வாறான சம்பவங்கள் மேலும் பாதிக்கச் செய்கின்றன. இதனால் பல இலட்சக்கணக்கான லீற்றர் நீர்ப் பாதைகளிலும், தமது இருப்பிடங்களிலும் திறந்துவிடப்பட்டது. இவை பொதுமக்களின் நீர் கணக்குகளிலேயே கழிக்கப்படவுள்ளது.

எனவே, இச்செயற்பாட்டை உடனடியாக விசாரணைசெய்து நீர் பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு உரிய அதிகாரிகளிடமும், அமைச்சரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை மீளத் திறக்க கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

உயர் மட்டக்குழு கள விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடல்

(திகாமடுல்ல நிருபர்)

ஒலுவில் துறைமுகத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தை மீள இயங்கச் செய்யும் பொருட்டு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய கடற்றொழில் நீரியல்வள அமைச்சிலிருந்து அபிவிருத்திப் பணிப்பாளர் எச்.எம்.கபில ஜானக்க பண்டார குணரத்ன தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று நேற்று (14) ஒலுவில் மீன்பிடித்துறைமுகத்துக்கு விஜயம்செய்து களப்பரிசோதனை மற்றும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திலிருந்து உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப் ஏ.எல்.ஏ.மஜீத் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஜனாப் எம்.ஏ.சி.எம்.ரியாஸ், கல்முனை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஸ்ரீரஞ்சன், கடல்சார் ஆலோசகர் எஸ்.எம்.மன்சூர் (Marine Consultant), சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் எம்.அஷ்ரப், மீன்பிடி போதனாசிரியர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜனாப் எம்.நஸீர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

ஏறாவூரில் முன்னாள் ஆயுதக்குழு முகாமாக இருந்த வீட்டின் சிவிலிங்கிலிருந்து 2 கைக்குண்டுகள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டு. ஏறாவூர் பிரதேசத்தில் முன்னர் ஆயதக்குழு முகாமாக இருந்த வீடு ஒன்றின் கூரை சிவிலிங்கிலிருந்து இரண்டு கைக் குண்டுகளை விசேட அதிரடிப்படையினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (14) மீட்டு, செயலிழக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள 5ஆம் பிரிவு தொம்புதர் வீதியிலுள்ள வீடொன்றின் உரிமையாளர் வெளிநாட்டில் குடும்பமாக இருந்துள்ள நிலையில், குறித்த வீட்டை கடந்த 2006ஆம் ஆண்டு ஆயுதக்குழு ஒன்று கைப்பற்றி அதில் முகாமிட்டு வந்தது.

இந்நிலையில் வீட்டு உரிமையாளர் 2007ஆம் ஆண்டு வந்தபோது அதில் ஆயுதக்குழு முகாம் அமைத்துள்ளதையடுத்து, பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்து அந்த முகாமிலிருந்து ஆயுதக்குழு வெளியேறியது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளர் வீட்டில் இருப்பதால் குறித்த வீட்டை புனர்நிர்மாணம் செய்கிறார். இந்நிலையில் கூரையின் ஓடுகளை மாற்ற முற்பட்டபோது சிவிலிங்கிலிருந்து இரு கைக்குண்டுகள் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் குண்டு செயலிழக்கும் பிரிவு நீதிமன்ற உத்தரவைப்பெற்று குறித்த இரண்டு குண்டுகளையும் நேற்று (14) மீட்டு செங்கலடி கறுத்தப்பாலம் அருகில் கொண்டுசென்று செயலிழக்கச் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை புதிய அத்தியட்சகர் பிரபாகரன் தனது கடமைகளை பொறுப்பேற்பு!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ்.எல்.விஜயசேகர இடமாற்றம் பெற்றுச்சென்றதன் பின்னர் புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிரபாகரன் இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிரபாகரன் கடந்த வெள்ளிக்கிழமை (12) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் பதில் அத்தியட்சகர் கேவர்ணகுலசூரிய, பிரதம ஜெயிலர்.எஸ்.மோகன்ராஜ் உள்ளிட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த 2017ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றிய இவர், அதே ஆண்டில் சுப்பர் கிரோட்டில் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்று 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றியுள்ளார்.

அதன்பின்னர் சிரேஷ்ட தரத்தைச் சேர்ந்த இவர், 2020ஆம் ஆண்டு இலங்கையில் பெரிய சிறைச்சாலையான தும்பறை மற்றும் போகம்பர ஆகிய சிறைச்சாலைகளில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிய பின்னர், 2021களில் வவுனியா சிறைச்சாலையில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிவந்த நிலையில், மட்டக்களப்பு சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டு. மாநகரசபையால் அமைக்கப்படவுள்ள பல்பொருள் அங்காடிக்கு அடிக்கல் நாட்டுவிழா

(கல்லடி நிருபர்)

உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவிக்கும் வகையிலும், மட்டக்களப்பின் பாரம்பரிய உணவுகளை சந்தைப்படுத்தும் நோக்கிலுமாக உலக வங்கியின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாநகரசபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள பல் உணவு அங்காடிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மட்டக்களப்பு மாநகரசபையின் 10ஆம் வட்டார உறுப்பினரும், ஊடகவியலாளருமான சிவம் பாக்கியநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றது.

நாட்டின் தற்கால பொருளாதார நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் மட்டக்களப்பின் தனித்துவமான பாரம்பரிய உணவுகளை சந்தைப்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக மட்டக்களப்பு மாநகரசபையானது உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டம் ஊடாக சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் பல் உணவு அங்காடியானது நிர்மாணிக்கப்படவுள்ளது.

கொழும்பு மாநகரில் அமைந்துள்ள கைலாசா உணவகத்தை ஒத்ததாக பல வகையான உணவுகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மேற்படி பல் உணவு அங்காடியானது அமையப்பெறவுள்ளது. இதனூடாக உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் அதேவேளை, உள்ளூர் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பை வழங்கக்கூடியதாக இருக்குமென மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு இவ்வுணவகம் அமையப் பெறவுள்ள இடமானது குப்பைகூளங்கள் நிறைந்து, காடு மண்டி காணப்படுவதாகவும், இரவுவேளைகளில் சட்டவிரோத சிலர் ஈடுபட்டு வருவதாகவும் பிரதேசவாசிகளால் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இத்திட்டத்தின் ஊடாக இவ்வாறான செயற்பாடுகள் தடுக்கப்படுவதோடு, நகர்ப் பகுதியும் இரவுவேளைகளில் இயங்கு நிலையில் இருக்குமெனத் தான் எதிர்பார்ப்பதாகவும், இந்நடவடிக்கைக்கு பொதுமக்களும் தமது ஒத்துழைப்புகளை மாநகரசபைக்கு வழங்க வேண்டுமெனவும் மாநகர முதல்வர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆர்.சுதர்ஷன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பாலமீன்மடுவில் திருடப்பட்ட மாடு ஏறாவூர் இறைச்சிக்கடையிலிருந்து மீட்பு

கடை உரிமையாளர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு பகுதியில் மாட்டுப்பட்டியிலிருந்து திருட்டுப்போன மாடுகளில் ஒன்றை ஏறாவூரில் இறைச்சிக்காக மாடு வெட்டும் மடுவத்திலிருந்து உயிருடன் கடந்த வெள்ளிக்கிழமை (12) மீட்கப்பட்டதுடன், இறைச்சிக்கடை முதலாளி ஒருவரை கைது செய்துள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மாட்டுப்பட்டியிலிருந்து கடந்த 2 தினங்களுக்கு முன்னர் 4 மாடுகள் காணாமல் போயுள்ளதையடுத்து, மாட்டின் உரிமையாளர் தேடிவந்துள்ளார்.

இந்நிலையில், ஏறாவூர் பகுதியிலுள்ள மாடு வெட்டும் மடுவத்தில் காணாமல்போன மாடுகளில் ஒன்று அங்கு கட்டியிருப்பதை மாட்டின் உரிமையாளர் கண்டுள்ளார்.

இதனையடுத்து அந்த மாட்டை இறைச்சிக்கு வெட்டுவதற்கு கொண்டுவந்த மாட்டு இறைச்சிக்கடை உரிமையாளரை கண்டுபிடித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து மாடு அறுக்கும் மடுவத்தில் கட்டியிருந்த மாட்டை அடையாளம் காட்டியதையடுத்து அதனை மீட்டதுடன், அந்த மாட்டை ஒருவரிடம் வாங்கியதாக தெரிவித்த மாட்டு இறைச்சிக்கடை உரிமையாளரை கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்தவரை நேற்று முன்தினம் (13) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் வியாபாரி ஒருவர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள விக்டரி மைதானத்தின் அருகில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்துகொண்டிருந்த போதைவஸ்து வியாபாரியொருவர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனைசெய்த பணத்தையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி ஐ.பி.தென்னகோன் தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த போதைவஸ்து வியாபாரி கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 6 கிராம் 690 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் போதைப்பொருள் விற்பனைசெய்த 21 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டு, காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் தொடர்ச்சியாக போதைப்பொருள் விற்பனை செய்பவர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரையும் மீட்கப்பட்ட போதைப்பொருள் மற்றும் பணத்தினையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி துமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எம்.றஹீம் தலைமையில் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டு. நகரின் வீதியோரத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

சந்தேகத்தில் இரு இளைஞர்கள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் ஆணொருவர் வீதியோரத்தில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் அவரை பொல்லால் தாக்கிய இரு இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (13) கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முனைத்தீவு பெரியபோரதீவு களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 53 வயதுடைய வல்லிபுரம் அன்பழகன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மட்டு. நகர் லொயிஸ் அவனியூர் வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் வீதி ஓரத்தில் கடந்த 11ஆம் திகதி உயிரிழந்த நிலையில், ஆண் ஒருவர் அடையாளம் காணப்படாத நிலையில் மீட்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து 12ஆம் திகதி குறித்த சடலத்தை அவரது மனைவியார் அடையாளம் காட்டிய நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான விசாரணையில் சிசிரிவி கெமரா ஒன்றினை சோதனையிட்டபோது, அதில் உயிரிழந்தவரை இருவர் மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்து இரு தடவைகள் பொல்லால் தாக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளதையடுத்து அந்த இருவரை அடையாளம் கண்டனர்.

இதில் நகர்பகுதியைச் சேர்ந்த 22, 21 வயதுடைய இளைஞர்கள் இருவரையும் சந்தேகத்தில் நேற்று முன்தினம் கைதுசெய்ததுடன், சம்பவத்திற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மதுபோதைக்கு அடிமையாகிய இவர், மனைவியுடன் பிரிந்து அவரது தாயாருடன் வாழ்ந்து வந்ததுடன், வவுணதீவு பிரதேசத்தில் நகைக்கடை ஒன்றில் வேலைப்பார்த்து வந்துள்ளார். சம்பவதினம் குறித்த வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்துக்கு அருகில் உடுப்பின்றி வீதியில் இருந்துள்ளார்.

இந்நிலையில், அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த இரு இளைஞர்களும் வீதியில் உடுப்பு இன்றி மதுபோதையில் ஆண் ஒருவர் இருப்பதைக் கண்டு அந்த வீதியால் பெண்கள் பிரயாணிப்பதால் அவரை திருத்துவதற்காக தும்புத்தடி பொல்லால் காலை 8.20 மணிக்கு தாக்கிவிட்டுச் சென்று, பின்னர் மீண்டும் அந்த வீதியால் திரும்பிவரும்போது அவர் அவ்வாறே இருந்துள்ளதைக் கண்டு மீண்டும் தாக்கிவிட்டு சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சடலமாக மீட்கப்பட்டவரின் பிரேத பரிசோதனை இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டு. புல்லுமலையில் 100 நாட்கள் செயல்முனைவின் 13ஆம் நாள் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு

(கனகராசா சரவணன்)

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 13ஆம் நாள் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் (13) மட்டக்களப்பு புல்லுமலை பிரதேசத்தில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராசா அழைப்பு விடுத்ததையடுத்து, புல்லுமலை தேவாலய சந்தியில் 200இற்கு மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றுதிரண்டு, மக்கள் நாங்கள் சுதந்திரமாக வாழ உரிமை வேண்டும், நாங்கள் நாட்டை துண்டாட தனி அரசைக் கேட்கவில்லை, இலங்கை நாட்டிற்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வைக் கேட்கின்றோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், காணாமல் போனவர்களுக்கு தீர்வு வேண்டும், பேச்சு சுதந்திரம் வேண்டும், நாங்கள் எங்கள் உரிமையைக் கேட்கின்றோம் எனும் சுலோகங்கள் ஏந்தி கோஷங்கள் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜரை ஊடகங்கள் ஊடாக வெளிக்கொண்டுவருமாறு ஊடகவியலாளர்களிடம் கையளித்த பின்னர் போராட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

நல்லூர் கோயில் உற்சவம் தொடர்பில் யாழ். மாநகர பிரதி முதல்வரால் உண்மைக்குப் புறம்பான கருத்துகள்

உறுப்பினர் பார்த்திபன் சபையில் கண்டனம்

(யாழ். நிருபர்)

நல்லூர் கோயில் உற்சவம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான சிறுபிள்ளைத்தனமான கருத்துகளை ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் யாழ். மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தொடர்பில் யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் சபையில் கண்டனம் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றபோதே மாநகர சபை உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் யாழ்.மாநகர சபைக்கும் சுமார் வரலாற்றுப் பின்னணியானது மிக நீண்டதாகும். இன்று நாங்கள் இருக்கின்ற இடமாக இருக்கட்டும் எதிர் காலத்தில் நாங்கள் இருக்கப்போகின்ற இடமாக இருக்கட்டும் எல்லாவற்றிலும் நல்லூர்க் கந்தனின் அருளாசி உள்ளது. ஆண்டாண்டு காலமாக நல்லூர்க் கந்தப்பெருமானுக்கு யாழ். மாநகர சபை செய்து வருகின்ற பணிக்கு நல்லூர்க் கந்தன் அருளிய செங்கோலுடன்தான் இந்த உயரிய சபை செயற்படுகின்றது. அந்த வரலாற்றுப் பந்தத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் நாம் செயற்படுவது உகந்ததல்ல.

2020ஆம் ஆண்டு ஆர்னோல்ட், மாநகர முதல்வராக இருந்தார். அவர் நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் வெளிநாடு ஒன்றுக்கு பயணமானதால் மாநகரத்தின் பதில் முதல்வராக பிரதி முதல்வர் து.ஈசன் பதவி வகித்தார். அப்போது (2020ஆண்டு) நல்லூர்க் கந்தசுவாமி

கோவில் திருவிழா தொடர்பில் ஊடக சந்திப்பு ஒன்றினை செய்திருந்தார்.

அந்த ஊடக சந்திப்பில் கொரோனா தொற்றுக்காரணமாக காவடிகள், அங்கப்பிரதட்சணம் உட்பட எந்தவொரு நேர்த்திக்கடன்களையும் பக்தர்கள் செய்யமுடியாது. அன்னதானம் வழங்க முடியாது என்று கூறியிருந்தார்.

2020ஆம் ஆண்டு நடத்திய குறித்த செய்தியாளர் மாநாட்டின் காணொளியை இம்முறை நல்லூர்த் திருவிழா காவடித் தன்னுடைய பேஸ்புக் வாயிலாக மீண்டும் பகிர்ந்திருக்கின்றார். இதன்மூலம் மக்களிடத்தில் ஒரு குழப்நிலையை உருவாக்குகின்றார்.

அதுமட்டுமன்றி, கடந்த 3 நாட்களுக்கு முன்னர் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த பிரதி முதல்வர், 2020ஆம் ஆண்டு நான் பதில் முதல்வராக இருந்த காவடிக் கொரோனா தொற்றுக்காரணமாக நல்லூர்க் கந்தன் ஆலயத்திருவிழா நடைபெறுமா, இல்லையா என்று கேள்விக்குறியாக இருந்தபோதுதான் ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு போன்ற மட்டங்களுக்கு கடிதங்களை அனுப்பி 50 பேர் மட்டும்தான் உட்செல்வதற்கு இருந்த அனுமதியை அதிகரித்து அந்த உற்சவத்தை நடத்தியிருந்தோம் என்று உண்மைக்குப் புறம்பான கருத்துகளை பொறுப்பற்றதனமாக ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன், 2021ஆம் ஆண்டு நல்லைக் கந்தன் வெளி வீதி வருவதற்கு தற்போதைய முதல்வர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று கருத்துகளை தெரிவித்தார்.

நல்லூர்க் கந்தப்பெருமான் வெளிவீதி வருவதற்கும் மாநகர முதல்வருக்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது. அந்த புரிதல் கூட இல்லாமல் ஒரு மாநகரத்தின் பிரதி முதல்வர் செயற்படுவது நகைப்பிற்குரியது.

2020ஆம் ஆண்டு திருவிழா தன்னாலதான் நடந்ததுபோலவும் 2021ஆம் ஆண்டு திருவிழா நடைபெறுவதற்கு தற்போதைய முதல்வர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் சிறுபிள்ளைத்தனமாக பொய்யான விடயங்களை ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வைத்தமிழ் மக்களின் அடையாளம் என்பதனையும் தாண்டி அது யாழ்ப்பாணத்தின் அடையாளமாக எல்லோராலும் பார்க்கப்படுகின்ற நிலையில், நல்லைக் கந்தன் உற்சவத்திற்கு யாழ். மாநகர சபை செய்கின்ற பணி வருமானத்தைக் கருத்திற்கொண்டது அல்ல. அது வரலாற்று ரீதியான தெய்வீகப் பணி. எனவே, அப்பணி தொடர்பில் தனக்கிருக்கின்ற ஆர்வக்கோளாறினால் இவ்வாறு சிறுபிள்ளைத்தனமான கருத்துகளை ஊடகங்களுக்கு வழங்குவதை கண்டிப்பதோடு பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம் 28இல் ஆரம்பம்

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பன்னிரண்டு நாட்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் 08ஆம் திகதி, வியாழக்கிழமை ஆவணித் திருவோண தினத்தன்று காலை 8.30 மணிக்கு "தூர்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் இடம்பெறவுள்ள தீர்த்தோற்சவம் மற்றும் மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ள கொடியிறக்கத்துடன் நிறைவடைவுள்ளது.

தினமும் முற்பகல் 9.30 மணிக்கும், பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்த மண்டப பூஜை இடம்பெற்று அம்பாள் திருவீதி உலா இடம்பெறும்.

மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியவர்கள் ஆசார சீலர்களாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகைதந்து வழிபாடியற்றி அம்பிகையின் அஷ்ட சித்திகளையும் பெற்றுய்யுமாறு தேவஸ்தான நிர்வாக சபை கேட்டுக்கொண்டுள்ளது.

மரம் கடத்திய குற்றத்தில் அறுவர் கைது

(யாழ். நிருபர்)

அனுமதியின்றி கெப் ரக வாகனத்தில் பனை மரங்களை ஏற்றிவந்த அறுவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் மற்றும் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பனைமரங்களை ஏற்றி வரும்வேளை பொன்னாலை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (13) கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகன சாரதி மாத்திரம் வாகனத்தில் வந்தநிலையில் ஏனையோர் மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் மற்றும் பனை மரங்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயினுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் (13) ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

இதன்போது, 38 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மத்திய சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் குழு விஜயம்

(யாழ். நிருபர்)

இலங்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலேல குணவர்தன தலைமையிலான மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்று கடந்த வெள்ளிக்கிழமை (12) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தது.

வைத்தியசாலையின் பகுதிகளை பார்வையிட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

காணாமலாக்கப்பட்டோருக்கான பரிகாரம் வழங்கப்படும்

திலீபன் எம்.பி. தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

காணாமலாக்கப்பட்டோருக்கான பரிகாரம் வழங்கப்படும் - என வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், சமூகள்ள ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அரசாங்கம் ஒரு சிலரைத் தவிர சர்வகட்சி அரசாங்கமாகத்தான் உள்ளது. ஆனால், அந்த ஒரு சிலரும் எமது ஆளுங்கட்சிக்கு வாக்களித்தவர்கள்தான். ஜனாதிபதி அனைத்து கட்சிகளையும் தம்முடன் பேசி சர்வகட்சியில் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார். சிலர் தலையையும், வாலையும் காட்டும் நிலை காணப்படுகின்றது. இன்னும் ஒரு சில நாட்களில் எல்லாம் சரியாகி விடும்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் 2000ஆம் நாளை கடந்துள்ளது. இதில் பலர் பலவிதமான கருத்துகளை முன்வைக்கிறார்கள். இந்தப் போராட்டம் முதன் முதலில் வவுனியா மாவட்டத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டது. வெறும் 12 பேருடன் வவுனியா தபால் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. அந்த 12 பேரில் நானும் ஒருவன். என்னை நண்பர்கள், உறவுகளுடன் இணைந்த கட்சி பேதமின்றி எவ்வித அரசியலுமின்றி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தோம். நாட்கள் செல்லச்செல்ல சில அரசியல்வாதிகளின் பின்புலத்தால் போராட்டத்தில் உள்ள சிலர் வேறு பாதையை நோக்கி செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாகவும், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் தொடர்பாகவும் எமது அமைச்சர் ஊடாக ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளோம். நானும் ஒரு தமிழ் மகனாக அவர்களுக்கான பரிகாரம் கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றேன்.

காணாமலாக்கப்பட்டோருக்கான ஒரு பரிகாரம் வழங்கப்படும். விரைவில் அதனை எழுத்து வடிவில் கொடுக்கவுள்ளோம். கலந்துரையாடி அந்த தீர்வு எட்டப்பட்ட பின் அதனை வெளிப்படுத்த முடியும் - என்றார்.

சர்வதேச யானைகள் தினம் குறித்த விழிப்புணர்வு யாழில்

(யாழ். நிருபர்)

சர்வதேச யானைகள் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே யானைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (12) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் சுழகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

எதிர்காலத்தை நோக்கிய சுற்றுச்சூழல் சுழகத்தின் தலைவர் ம.சசிதரன், யானைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மாணவர்களுக்கு தெளிவூட்டினார்.

அத்துடன், யானை உருவங்களை அணிந்து பாடசாலை மாணவ மாணவிகள் விழிப்பூட்டும் நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் குதிலீபன், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

யானைகளைப் பாதுகாக்கவும், சட்டவிரோதமான முறையில் யானைகளை வேட்டையாடுதலை தடுக்கவும் சர்வதேச யானைகள் தினம் ஒகஸ்ட் 12ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இணுவிலில் மூதாட்டி சடலமாக மீட்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியிலுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்துவந்த மூதாட்டி கடந்த வெள்ளிக்கிழமை (12) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இணுவில் மஞ்சத்தடி கோட்டம்பனை பகுதியைச் சேர்ந்த தெய்வேந்திரம் வசந்தி (வயது 62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வருவதுடன், ஒரு பிள்ளை வெளியூரில் வசித்து வருகின்றார்.

இந்நிலையில் வயோதிபப்பெண் தனது வீட்டில் தனியே வாழ்ந்து வந்துள்ளார்.

இவரது வீட்டுக்கு அருகில் வசிக்கும் இவரது சகோதரன் வழமைபோன்று அன்றைய தினம் உணவு கொடுக்கச் சென்ற நிலையில் சகோதரி உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

Huawei இலங்கையில் பல தனியார் துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் "மனிதநேய ஒன்றிணைவு" அவசரகால நிவாரணத் திட்டத்துடன் கைகோர்க்கிறது.

பாதிக்கப்பட்ட 200,000 அதிகளவான குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் பௌத்த வின்யா ஆரியரத்ன, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி Liang Yi, டயலொக் ஆசியாட்டா பி.எல்.சியின் குழும பிரதான தொழிலுட்ப அதிகாரி பிரதீப் டி. அல்மேடா, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் சிரேஷ்ட தயாரிப்பு தீர்வு முகாமையாளர் காவிந்த மஞ்சள

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கில் டயலொக் ஆசியாட்டா பி.எல்.சி, MAS Holdings, Hemas Holdings PLC, விதியோக பங்காளியாக சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் PwC பூரீலங்கா ஆகியவற்றால் நிறுவப்பட்ட இந்த 'மனிதநேய ஒன்றிணைவு' செயற்றிட்டத்திற்கு CBL Group, Citi, Sunshine Holdings PLC மற்றும் Huawei Technologies Lanka Co ஆகியவையும் பின்னர் படிப்படியாக இணைந்துகொண்டன.

சமூக நல்வாழ்வை இலக்காகக்கொண்ட பங்காளர்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும் 'மனிதநேய ஒன்றிணைவு' செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த 200,000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். தற்போது 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்படுவதுடன் மேலும் 100,000க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை இந்த 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டமானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

"இரண்டு தசப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் இயங்கிவரும் ஒரு நிறுவனம் என்ற வகையில், Huawei இலங்கை எப்போதும் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய வரலாற்று புகழை கொண்ட அழகான தேசம் என்று உறுதியாக நம்புகிறது. இலங்கைக்குள் இலங்கைக்கான எங்கள் அர்ப்பணிப்பு என்ற வகையில், இந்த சவாலான நேரத்தில் இலங்கை மக்களுடன் நாங்கள் என்றும் ஒன்றாக இணைந்து நிற்கிறோம். எனவே, தற்போதைய நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை ஆதரிப்பதற்காக எங்கள் மூலோபாய பங்காளிகளான டயலொக் ஆசியாட்டாவுடன் கைகோர்க்க முடிவு செய்தோம். இலங்கை விரைவில் ஒரு நிலையான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்று Huawei Sri Lanka இன் பிரதம நிறைவேற்று அதிகாரி Liang Yi தெரிவித்தார்.

டயலொக் ஆசியாட்டா பி.எல்.சியின் குழும தலைமை தொழில் நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேடா கருத்து தெரிவிக்கையில், 'மனிதநேய ஒன்றிணைவு' மனிதாபிமான செயற்றிட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் இந்த திட்டத்தில் இணைந்துகொண்டமைக்காக அனைத்து பங்காளிகள் சார்பாக, Huaweiக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். 200,000 அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களை ஆதரிப்பதே எங்கள் இலக்காகும். மேலும், இந்த இலக்கை அடைய சமூக தலைவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பிற நிறுவனங்களையும் எங்களுடன் இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஒற்றுமையின் மூலம் எங்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும், 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் விருப்பமான டிஜிட்டல் பங்காளியாக, எங்கள் சமூகத்தின் தேவையின்போது அவர்களுக்கு ஆதரவளிப்பது எங்கள் பொறுப்பு என்றும் நாங்கள் எப்போதும் நம்புகிறோம்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நமது சொந்த மக்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் இணையுமாறு ஏனைய அனைத்து பெருநிறுவனங்களுக்கு 'மனிதநேய ஒன்றிணைவு' அழைப்பு விடுக்கின்றது. அனைவரும் தங்களின் கிரெடிட்/டெபிட் கார்ட், வங்கி வைப்பு eZ Cash, Star Points, genie அல்லது 0776 421421 என்ற இலக்கத்திற்கு Top up செய்வதன் மூலம் இணைந்துகொள்ள முடியும். நன்கொடை வழங்குதல் தொடர்பாக செயல்முறை பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.lk/don_E க்கு செல்லுங்கள்.

மனிதநேய ஒன்றிணைவு

Dialog MAS HEMAS CBL citi HUAWEI

2022 மார்ச் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.ஜெய்ஷங்கரின் இலங்கை விஜயம்

வருகையின்போது கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகள்

★ இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக இந்தியாவிடமிருந்து மானிய உதவியை அமுல்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ யாழ்ப்பாணக் கலாசார நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பான உடன்படிக்கையின் ஒஆவது பிரிவின் திருத்தம் குறித்த குறிப்புகளை பரிமாறிக்கொள்தல்.

★ இந்தியாவின் மானிய உதவியுடன் இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (SL-UDI) திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்தை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ யாழ்ப்பாணத்திற்ற அப்பால் உள்ள மூன்று தீவுகளில் கலப்பு (ஹைபிரிட்) மின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ இலங்கையில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ காலி மாவட்டத்தில் உள்ள 200 பாடசாலைகளில் தனிப்பயனாக்கப்பட்ட பாடத்திட்ட மென்பொருளுடன் கூடிய நவீன கணினி ஆய்வகங்கள் மற்றும் ஸ்மார்ட் பலகைகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ சஷ்மா சுவராஜ் வெளிநாட்டு சேவை நிறுவனம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.

ஸ்ரீமதி திரௌபதி முர்மு
இந்திய ஜனாதிபதி

ஸ்ரீ நரேந்திர மோடி
இந்திய பிரதமர்

உயர் ஸ்தானிகரின் செய்தி

இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை இன்றைய தினம் இந்தியா கொண்டாடும் நிலையில், இலங்கையிலுள்ள எமது சகோதர சகோதரிகளுக்கு நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இதேவேளை, இலங்கையும் தனது சுதந்திரத்தின் 75ஆம் ஆண்டை எட்டியுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் (ஆசாதிகா அம்ரித் மஹோத்சவ்) இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் இலங்கை முழுவதும் தொடர்ச்சியான பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இந்தக் கொண்டாட்டங்களில் மிகவும் முக்கிய நிகழ்வாக இந்தியாவும் இலங்கையும் இணைந்து கொண்டாடும் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகளை குறிப்பிட முடியும்.

நண்பர்களே, அயலுறவுக்கு முதலிடம், கொள்கையின் வழிகாட்டல்களின்கீழ் இலங்கை மக்களையும் அவர்களின் நல்வாழ்வையும் இந்தியா எந்நேரமும் தன்மனதில் கொண்டுள்ளது. எமது சகோதர இலங்கையர்களுக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பைச் சுட்டிக்காட்டும் முகமாக முன்னொருபோதும் இல்லாதவகையில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிதி, பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகள் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான எமது பன்முகப்படுத்தப்பட்ட உதவிகள் ஊடாக இலங்கை மக்களின் பல்வேறு தேவைகளையும் துரிதமாக நிவர்த்தி செய்துகொள்வதற்காக இந்தியாவும் இந்திய மக்களும் முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இருதரப்பு உறவுகள் பல்வேறு புதிய துறைகளிலும் தோற்றம்பெற்று வளர்ந்து வருகின்றன. 2022 மார்ச் மாதம் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சமயத்தில் இரு அரசாங்கங்களுக்கும் இடையில் எட்டு முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள முறைமை திட்டம் முதல் பௌத்த தொடர்புகளின் மேம்பாட்டுக்கான 15 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை ஈறாக, பாதுகாப்பு மற்றும் ஏனைய விடயங்கள் வரையிலான பல்வேறு துறைகளையும் சார்ந்ததாக இந்த உடன்படிக்கைகள் அமைகின்றன. எமது உறவின் உத்வேகத்தைக் கட்டியம் கூறுவதாக இவை அமைந்துள்ளன.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உந்துசக்தியை வழங்கும் வினைத்திறன் மிக்க ஒரு பங்காளியாக இந்தியா உள்ளது. துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க சக்தி, உட்கட்டமைப்பு போன்ற பல்வேறு துறைகள் உள்ளிட்ட பரஸ்பரம் நன்மை தரும் வகையிலான இந்திய முதலீடுகள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் வேலைவாய்ப்பினை அதிகரிப்பதிலும் மிகவும் முக்கியமான காரணிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நாகரீக ரீதியிலான தொடர்புகள், பொதுவான மரபுகள், மக்கள் இடையிலான பிணைப்புகள் ஆகியவை இந்திய-இலங்கை உறவின் சிறப்பம்சங்களாகும். நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட வழித்தடத்தில் இன்று நாம் துரிதமாக முன்னேறி வரும் நிலையில் எதிர்கால சந்ததிக்காக இப்புராதனமான உறவினை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையிலுள்ள சகல இந்தியர்களுக்கும், இலங்கை சகோதர சகோதரிகளுக்கும் மீண்டும் ஒரு தடவை எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோபால் பாக்லே

2022இல் இலங்கை மக்களுக்கு சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆதரவை வழங்கிய இந்தியா

மருத்துவப் பொருட்கள் விநியோகம்

> இலங்கை மக்களுடன் துணைநின்று ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்.
> பிரதமர் நரேந்திர மோடி

★ உணவு, மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு 1 பில்லியன் டொலர் சலுகைக் கடன்.

★ பெற்றோலிய பொருட்கள் வாங்குவதற்கு 500 மில்லியன் அமெ. டொலர்கள் கடன் வசதி.

★ யூரியா உரம் கொள்முதல் செய்ய 55 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்.

★ ஜூன் 2022இற்குள் ஆசிய கணக்கு தீர்வக ஒன்றியத்திற்காக வங்கி, இந்திய ரிசர்வ் வங்கிக்கு இலங்கை மத்திய வங்கி செலுத்தவேண்டிய சுமார் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிலுவைத் தொகையை ஒத்திவைத்தல்.

★ அந்நிய செலாவணி கையிருப்பை வலுப்படுத்த 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்றம்.

★ பல்வேறு நிறுவனங்கள் ஊடாக இலங்கை முழுவதும் 26 தொன்களுக்கும் அதிகமான மருந்துகள் நன்கொடை .

★ சமுதாயத்தில் தேவைப்படும் பிரிவுகளுக்கு உலர் உணவுகளை விநியோகித்தல்.

★ மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு மண்ணெண்ணெய்.

★ இலங்கைக்காக சர்வதேச மன்றங்களில் வாதிடுவது.

யூரியா

மண்ணெண்ணெய்

உணவு

அரிசி, பாலமா மற்றும் மருத்துவப் பொருட்கள்



5,00,000 தொன்னுக்கு மேற்பட்ட எரிபொருள்

Ministry of Finance @FinMinSL

Union Finance Minister Smt. @nsitharaman met Sri Lanka Finance Minister Mr Ali Sabry on the sidelines of IMF-WB Spring Meetings, at Washington D.C., today, and discussed current economic situation and its approach towards addressing the prevailing challenges in Sri Lanka. (1/2)

Union Finance Minister Smt. @nsitharaman assured Sri Lanka that as a close friend and good neighbour, India will try to extend all possible cooperation and assistance to Sri Lanka. (2/2)

12:16 AM · Apr 19, 2022 · Twitter for iPhone

வளமான எதிர்காலத்துக்கான பங்குடைமை

இருதரப்பு வர்த்தகம்

★ 2021இல் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளி மற்றும் மூன்றாவது பெரிய ஏற்றுமதி சேருமிடம்.

★வருடாந்த இருதரப்பு வர்த்தகம் சுமார் 5.45 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

★ சுதந்திர வர்த்தக உடன்படிக்கை FTA அமுலுக்கு வந்தது தொடக்கம் 2000ஆம் ஆண்டிலிருந்து வர்த்தகத்தில் கணிசமான அதிகரிப்பு.

★ இலங்கையின் ஏற்றுமதியில் 60% க்கும் அதிகமானவை FTAஇன் நன்மைகளைப் பயன்படுத்துகின்றன.

இந்திய முதலீடுகள்

★ இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு அதிகளவில் பங்களித்த நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது.

★ இந்தியாவில் பல்வேறு துறைகளில் முன்னணி நிறுவனங்களின் கிளைகள் பல இலங்கையில் இயங்குகின்றன.

★ இந்தியாவிலிருந்து வரும் அந்நிய நேரடி முதலீடு 2.2 பில்லியன் டொலருக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

★ மேலும் பல முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



பசுமையான எதிர்காலத்தை நோக்கி

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில் ஒத்துழைப்பு முன்னுரிமை அளிக்கவேண்டிய பகுதியாகும்.

★ 100 மெகாவோட் சூரிய மின் நிலையம் அமைப்பது தொடர்பாக NTPC லிமிடெட் இடையே கூட்டு முயற்சி மற்றும் பங்குதாரர்களின் ஒப்பந்தம் (JVSHA) என்பன இந்தியா மற்றும் இலங்கை மின்சார சபைக்கிடையே மேற்கொள்ளப்படவுள்ளது.

வளமான வர்த்தக உறவுகளைக் கட்டியெழுப்புதல்

நீடித்த வளர்ச்சிக்காக இலங்கை - இந்திய பங்குடைமை

2022 மார்ச் 22ஆம் திகதி இந்தியாவின் பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வர்த்தகக் குழுவினர் இலங்கையைச் சேர்ந்த வர்த்தக நிறுவன பிரதிநிதிகளுடன் இலங்கையில் சந்திப்பு

மருந்தியல் துறையில் ஒத்துழைப்பினை மேம்படுத்தும் இலக்குடன் 2022 மே 31ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைச்சேரி செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளுடன் வர்த்தக மற்றும் மருந்தியல் துறை சார்ந்த பிரதிநிதிகள் சந்திப்பு.

ஹரே கிருஷ்ணா

ISKCON

சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

ஸ்தாபக ஆச்சாரியர் அருட்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா ஆலயம்

இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13.

தொலைபேசி : 011 2433325

ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி

19-08-2022 வெள்ளிக்கிழமை

பேரன்புடையீர்,

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த நன்னாள் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் சிறப்பாக நடைபெற பகவான் கிருஷ்ணரின் திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் அதிகாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை விஷேட ஆராதனைகள் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

காலை 6.00 : மங்கள ஆரத்தி

காலை 6.30 : துளசி ஆராத்தி

காலை 8.00 : தர்ம ஆராத்திப், குரு பூஜையும்

காலை 9.00 : குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரிச் சங்கினால் பால் அபிஷேகமும், ஆராதனையும், தொட்டிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.

பகல் 12.30 : ராஜபோக ஆராத்தி

மாலை 5.30 : தூப ஆராத்தி

மாலை 6.15 : துளசி ஆராத்தி

மாலை 6.30 : சந்தியா ஆராத்தியைத் தொடர்ந்து குழந்தை கிருஷ்ணரை தொட்டிலிட்டு தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

இரவு 8.00 : ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து விஷேட ஆராதனைகளும் நடைபெற்ற பின் பிரசாதம் வழங்கப்படும்.

இவ்விழாவிற்கான செலவினங்களை நீங்கள் உபயமாகச் செய்வதாயின் அதற்கான பணத்தை அலுவலகத்தில் அல்லது வங்கிக்கணக்கில் செலுத்தி பகவான் ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணாவின் பரிபூரண அருட்கடாட்சத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுய்யவும்.

அபிஷேகத்திற்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள் மற்றும் அன்றைதாளத்திற்கு வேண்டிய பொருட்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்படும்.

ஸ்ரீ வியாச பூஜை

சர்வதேச கிருஷ்ண பக்திக்கழக ஸ்தாபகரும், எங்கள் குருவுமாகிய அருட்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை (20.08.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

மீண்டும் தலைவரான ஷகீப்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவராக கலவதூறை வீரர் ஷகிப் அல்-ஹசன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது.

இம்மாத இறுதியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகின்ற ஆசியக்கின்னஸ் தொடருக்கான பங்களாதேஷ் அணியின் குழாத்தில் தலைவராக ஷகீப் அல்-ஹசன் பெயரிடப்பட்டுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள குழாத்தில் முன்னணி துடுப்பாட்ட வீரர் லிட்டன் டாஸ் உபாதை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கின்னம் நிறைவடையும்வரை பங்களாதேஷ் அணியின் தலைவராக அனுபவ வீரர் ஷகிப் அல்-ஹசன் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஷகிப் முன்னதாக பங்களாதேஷ் அணியின் தலைவராக நீண்டகாலம் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் குழாம்

ஷகிப் அல்-ஹசன் (தலைவர்), அனாமுல் ஹக் பிஜோய், முஷ்பிகுர் ரஹீம், அபிப் ஹுசைன், மொஸ்டாக் செய்க், மஹ்முதுல்லாஹ் ரியாத், செயிக் மெஹிடி, மொஹமட் செய்புதீன், ஹசன் மஹ்மூட், முஷ்பிகுர் ரஹ்மான், நாசும் அஹ்மட், சபீர் ரஹ்மான், மெஹிதி ஹசன் மிராஸ், எபட்டொட் ஹுசைன், பர்வெஸ் ஹொசைன் இமோன், நூருல் ஹஸன் சொஹான், தஸ்கின் அஹமட்.

ராஜஸ்தான் அணி உரிமையாளர் எனக்கு 3-4 தடவைகள் முகத்தில் அறைந்தார்

திடுக்கிடும் தகவலை வெளியிட்ட டெய்லர்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ரோஸ் டெய்லர் தனது சுயசரிதை புத்தகத்தில் சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். தனது சொந்த அணியிலேயே தன்னை சிலர் இனவெறியுடன் கேலி செய்ததாக சமீபத்தில் கூறி கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தினார். இந்நிலையில் அவர் தனது சுயசரிதை புத்தகத்தில் மேலும் சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். ஐ.பி.எல். அனுபவத்தை அதில் குறிப்பிட்டுள்ள டெய்லர், 2011ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின்போது நான் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம்பெற்றிருந்தேன். இதில் மொகாலியில் நடந்த பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் 195 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடியபோது, நான் எல்.பி.டபிள்யூ. முறையில் டக்-அவுட் ஆனேன். எங்களால் இலக்கை நெருங்கக்கூட முடியவில்லை. ஆட்டம் முடிந்து ஹோட்டலுக்குத் திரும்பியபோது, மேல் தளத்திலுள்ள பாரில் வீரர்கள், உதவியாளர், அணி நிர்வாகத்தினர் அனைவரும் இருந்தனர்.

ஷேன் வோர்னும் அங்கு இருந்தார். அப்போது ராஜஸ்தான் அணியின் உரிமையாளர்களில் ஒருவர், ரோஸ்.... நீங்கள் டக்-அவுட் ஆவதற்காக நாங்கள் கோடிக்கணக்கான ரூபா உங்கள் மீது முதலீடு செய்யவில்லை என்று கூறி 3-4 தடவைகள் முகத்தில் அறைந்துவிட்டார். அடித்ததும் அவர் சிரித்தார். முகத்தில் விழுந்த அறை பலமாக இல்லை. ஆனாலும் விளையாட்டாக இவ்வாறு செய்தாரா என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியவில்லை. அன்றைய சூழலில் இதை தான் பிரச்சினையாக்கவில்லை - என்று கூறியுள்ளார்.

ரோயல் கல்லூரிக்கு அதிர்ச்சியளித்து சம்பியனான இஸிப்பத்தன கல்லூரி

பாடசாலை ரக்பி லீக் - 2022 தொடரின் சம்பியனாக ரோயல் கல்லூரியை வீழ்த்தி இஸிப்பத்தன கல்லூரி தெரிவானது.

கடந்த வாரம் நடைபெற்ற சுப்பர் லீக் சுற்றின் முதல் ஆட்டத்தில் ரோயல், இஸிப்பத்தன கல்லூரிகள் வெற்றியீட்டின. இந்நிலையில் நேற்று மாலை கொழும்பு ஹெவ்லொக் பார்க்கில் நடைபெற்ற சம்பியனை தீர்மானிக்கும் போட்டியில் ரோயல் கல்லூரி - இஸிப்பத்தன கல்லூரி ஆகியன நேருக்கு நேர் மோதின.

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் விறுவிறுப்பாக நடைபெற்ற குறித்த போட்டியின் முதல் பாதியில் கொழும்பு ரோயல் கல்லூரி முன்னிலை வகித்தது. எனினும், இரண்டாம் பாதி ஆட்டத்தில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இஸிப்பத்தன கல்லூரி இறுதியில் 21 – 15 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டியது. இன்று இதே மைதானத்தில் நடைபெறும் போட்டியில் சென். ஜோசப் கல்லூரி - வெஸ்லி கல்லூரி ஆகியன மோதுகின்றன.

Dialog SCHOOLS RUGBY

எஸ்.எல்.சி. இன்விடேஷனல் ரி20 லீக் - 2022: இறுதிப்போட்டியில் ப்ளூஸ் - ரெட்ஸ் அணிகள்

இன்று பலப்பரீட்சை

கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்றுவரும் எஸ்.எல்.சி. இன்விடேஷனல் ரி20 லீக் கிரிக்கெட் தொடரில் இன்றைய தினம் நடைபெறும் இறுதிப்போட்டியில் சரித் அசலங்க தலைமையிலான எஸ்.எல்.சி. ப்ளூஸ் அணியும், குசல் மெண்டிஸ் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணியும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற ப்ளூஸ் அணிக்கும், ரெட்ஸ் அணிக்கும் இடையிலான இரண்டாவது போட்டியில் ரெட்ஸ் அணி 33 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கான இடத்தை உறுதிசெய்தது. அனைத்து லீக் போட்டிகளும் நிறைவடைந்துள்ள நிலையில், ரெட்ஸ் அணி 3 போட்டிகளில் இரு வெற்றிகளையும், ப்ளூஸ் அணியும் அதே போன்று இரு வெற்றிகளையும் குவித்து முதலிரு இடங்களையும் கைப்பற்றின.

ஃரேஸ் அணி 3 போட்டிகளில் ஒரு வெற்றியுடன் மூன்றாமிடத்தையும், ஃரீஸ்ஸ் அணி 3 போட்டிகளில் ஒரு வெற்றியுடன் ரன்ரேட் அடிப்படையில் இறுதி இடத்தையும் பிடித்தன. இந்தத் தொடரில் பிரகாசித்த வீரர்களுக்கு அடுத்து நடைபெறவுள்ள ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் மற்றும் ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் வாய்ப்பு கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒலித்து ஓய்ந்தது 'ஆகாஷவாணி' சரோஜ் நாராயணசுவாமியின் குரல்

பிரபல செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயணசுவாமி வயது மூப்பு காரணமாக தனது 87ஆவது வயதில் மும்பையில் நேற்றுமுன்தினம் காலமானார்.

தனது தனித்துவக் குரலால் அதிகமாக அறியப்பட்டு, அழியா புகழ்பெற்ற சரோஜ் நாராயணசுவாமியின் மறைவு வானொலி நேயர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவரின் மறைவுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

''அன்றாட செய்திகளின் குரலாக நுழைந்து வரலாற்றின் குரலாக நினைத்து நின்றுவிட்டது சரோஜ் நாராயணசுவாமி குரல். மறக்கவொண்ணா நிகழ்வுகளோடு பின்னிப் பிணைந்த அக்குரல் நேற்றோடு ஒலிப்பதை நிறுத்திக்கொண்டுவிட்டது அறிந்து வேதனையடைந்தேன்'' - என தெரிவித்துள்ளார்.

தன்னுடைய வசீகரக் குரலால் பெரும் ரசிகர் பட்டாளத்தைக்கொண்டவர் சரோஜ் நாராயணசுவாமி. ''ஆகாஷவாணி.. செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி..'' என தனது கம்பீர குரலால் வானொலியில் அவர் கூறுவது பலரையும் கவர்ந்து இழுத்தது.

தஞ்சாவூரை பூர்விகமாகக்கொண்ட சரோஜ் நாராயணசுவாமி அகில இந்திய வானொலியின் முதல் செய்தி வாசிப்பாளர் என்ற பெருமையை பெற்றவர். டில்லியில் 1965ஆம் ஆண்டில் அகில இந்திய வானொலியில் சேர்ந்த அவர், 35 ஆண்டுகள் வானொலி ஒலிபரப்பில் பங்காற்றினார்.

இவரது கம்பீர குரலுக்காகவும், உச்சரிப்புக்காகவும் ஏராளமான நேயர்களின் மனங்களில் நீங்கா இடம்பெற்றார். சுமார் 35 ஆண்டுகள் டில்லியில் பணியாற்றிய சரோஜ் நாராயணசுவாமி கடந்த 1995ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார்.

ஓய்வுக்குப் பின் தமிழ்ப் படங்கள், ஆவணப்படங்களுக்கு குரல் கொடுத்து வந்தார். இந்நிலையில், மும்பையில் வசித்துவந்த அவர் நேற்றுமுன்தினம் காலமானார்.

சரோஜ் நாராயணசுவாமியின் சொந்த ஊர் தஞ்சாவூர். இவர் பிறந்து வளர்ந்து படித்தது அனைத்தும் மும்பையிலுள்ள பிஎ ஆங்கிலம் படித்தவர். எனினும், தமிழில் புலமை பெற்றிருந்தார். அதன்பின்னர் திருமணம் முடித்து வானொலி பணிக்காக டில்லியில் குடியேறினார். பணி ஓய்வுக்குப் பின்னர் மும்பையில் வசித்து வந்தார்.

இந்திய வானொலியின் முதல் தமிழ் செய்தி வாசிப்பாளராக இருந்த இவர் பெண்களுக்கு முன்னுதாரணமாக இருந்தார். ஒலிபரப்புத்துறையில் அவர் பணியாற்றியதை பாராட்டி இவருக்கு 2009இல் தமிழக அரசு சார்பில் 'கலைமாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஹரிபோர்ட்டர் எழுத்தாளர் ரௌலிங்குக்கு கொலை மிரட்டல்

சல்மான் ருஷ்டி மீதான தாக்குதலுக்கு ட்விட்டர் பக்கத்தில் கண்டனம் தெரிவித்த ஹரிபோர்ட்டர் நூல்களின் ஆசிரியை ஜே.கே.ரௌலிங்கிற்கு (JK Rowling) ''அடுத்து நீதான்'' என கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் பின்னணிகொண்ட தீவிரவாதியிடமிருந்து இந்த மிரட்டல் வந்துள்ளது.

''கவலைப்படாதே அடுத்த தாக்குதல் உன்மீதுதான்'' என்று அந்த தீவிரவாதி மிரட்டியுள்ளார்.

மேலும், சல்மான் ருஷ்டியை கத்தியால் குத்திய ஹாதி மத்தரையும் அந்த மிரட்டல் செய்தியில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 நொடிகளில் 15 முறை கத்திக்குத்து

செயற்கை சுவாசத்துடன் உயிருக்குப் போராடும் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி

- கண்பார்வை – பேச்சு பறிபோகும் அபாயம்
- அமெரிக்க ஜனாதிபதி பைடன் கண்டனம்

கத்திக்குத்துக்கு இலக்காகி அமெரிக்காவின் நியூயோர்க் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய வம்சாவளி நாவலாசிரியர் சல்மான் ருஷ்டியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுயநினைவை இழந்துள்ள சல்மானுக்கு வென்டிலேட்டர் மூலம் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டுவருகிறது. கழுத்தில் கத்தியால் குத்தப்பட்டால் நரம்பு துண்டாகி, ஒரு கண்ணில் பார்வையை இழப்பும், பேச்சு திறனையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சல்மான் மீதான கொலைவெறித் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி கேள்விப்பட்டு தாம் மிகுந்த அதிர்ச்சியடைந்திருப்பதாக ஜோ பைடன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மும்பையில் பிறந்து வளர்ந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எழுத்தாளரான சல்மான் ருஷ்டி, 1980களில் Satanic Verses என்ற நாவலை எழுதி மத அடிப்படைவாத அமைப்புகளின் பத்வாவுக்கு ஆளானவர். 75 வயது நிரம்பிய அவர் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

இந்நிலையில், நியூயோர்க் மாகாணம் Buffalo பகுதியில் கல்வி மையம் ஒன்றில் நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சியில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது சுமார் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் மேடையேறி சல்மான் ருஷ்டியை சரமாரியாகக் குத்தினார். கழுத்து, மார்பு, வயிறு என பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் குத்தியதில் இரத்த வெள்ளத்தில் கீழே சாய்ந்தார் சல்மான் ருஷ்டி. உடனடியாக அவர் மீட்கப்பட்டு ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

அங்கு அவருக்கு பல மணிநேரம் அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, வென்டிலேட்டர் உதவியுடன் தற்போது அவர் செயற்கை சுவாசமளிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

சல்மானின் உடல்நிலை தொடர்பாக அவரது உதவியாளர் தெரிவிக்கையில்,

''இது நல்ல செய்தி கிடையாது. கழுத்தில் கத்தியால் குத்தப்பட்டதால் நாம்பு துண்டிக்கப்பட்டுள்ளது. சல்மான் தனது கண்களில் ஒன்றில் பார்வையை இழக்க நேரிடலாம். அவர் பேசும் திறனையும் இழக்கக்கூடும். அவருடைய கல்லீரலும் கத்திக்குத்தில் சேதமடைந்துள்ளது'' என்றார்.

மேடையில் அவனைப் பிடிக்க முயன்ற சிலருக்கும் கத்திக்குத்து காயம் ஏற்பட்டுள்ளது. தப்பியோட முயன்ற அந்த இளைஞனை கூட்டத்தில் இருந்தவர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணையில் ஹாதி மத்தர் என்ற 24 வயதுடைய இளைஞர் எனவும் அவர் நியூஜெர்சியின் ஃபேர்வியூ பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது. குறித்த இளைஞனிடம் சல்மான் ருஷ்டி மீதான தாக்குதல் குறித்து நியூபெளின்சுலா பகுதியில் பலத்த பாதுகாப்புள்ள இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு பல்வேறு நாட்டு தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். சல்மானை தாக்கிய இளைஞன், இருபதே தொடிகளில் 15 முறை அவரை கத்தியால் குத்தியுள்ளார். மிகவும் வெறிபிடித்த இந்தத் தாக்குதல், சல்மானுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களை திகைக்க வைத்துள்ளது. இந்தத் தாக்குதலுக்காக அவர் சிறப்பு பயிற்சிகளை எடுத்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

சல்மான் ருஷ்டி தாக்கப்பட்டது பேச்சுசுதந்திரத்துக்கு எதிரான தாக்குதல் என உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவர் விரைவில் நலம்பெற வேண்டும் என்று எழுத்தாளர் தஸ்மீரா நஸ்ரீன் உள்ளிட்ட பலர் ட்விட்டரில் தனது பிரார்த்தனைகளை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த 1981ஆம் ஆண்டு சல்மான் ருஷ்டி எழுதிய 'மிட்நைட் சில்ட்ரன்' என்ற புத்தகத்துக்காக 'புக்கர் விருது' பெற்றவர்.

இவர், கடந்த 1988ஆம் ஆண்டு எழுதிய 'சாத்தானின் கவிதைகள்' என்ற புத்தகம், இஸ்லாம் மதத்தை அவமதிப்பதாக கூறி, ஈரான் மதத் தலைவரான கொமேனி அவருக்கு மரண தண்டனை விதித்தார். அவரை கொல்பவருக்கு பல கோடி பரிசும் அறிவிக்கப்பட்டது. அல்-கொய்தா உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத அமைப்புகள் அவரை கொல்வதற்கு பலமுறை முயன்றுள்ளன.

இதன் காரணமாக சல்மான் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதால், தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். அவருக்கு பிரித்தானிய அரசு பாதுகாப்பு அளித்தது. சில ஆண்டுகளுக்கு முன்பாக அவர் அமெரிக்காவில் குடியேறினார். 1998ஆம் ஆண்டு சல்மானுக்கு கொமேனியால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஈரான் அரசு நிறுத்த உத்தரவிட்டதாம், வெளி உலகில் சல்மான் நடமாடத் தொடங்கினார்.

உலக செய்திகள்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7